
திருவள்ளுவராண்டு - 2054 26.04.2023

# உலகத்தமிழ்

இதழ் – கஎஎ (177)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

## தமிழ் வளர்ச்சித் துறையின் ஆற்றல்மிகு ஆடவர்கள்




பிரிந்த கணவன் தலைவியின் மார்பில் எழுதிய தொய்யிலை நினைந்தே திரும்பிடுவான்
எனத் தேற்றும் அகநானூற்றுப் பாடல் எண் நூற்று எழுபத்து ஏழு
விரிந்த உலகின் வியத்தகு திறனெலாம் சுமந்து தமிழ்த் தொண்டாற்றும்
உலகத்தமிழிதழ் எண் நூற்று எழுபத்து ஏழு

உள்ளடக்கம்


4 கொள்கை விளக்கக் குறிப்பு

5 நூலேணி

6 தமிழெழுச்சி

7 ஆசிரியம்—நித்திரை நீக்கும் நிகழ்வுகள்!

8 அவ்வப்போது

9 மாண்புமிகு அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை!

10 தேன்துளி

11 சேரமன்னர் வரலாறு

12 ஆங்கிலம் அரும்பிய அரசும்—வாழ்வும்!

13 தனித்தமிழ் மாட்சி

14 South Indian Celebrities

15 அகநானூறு ஆங்கிலம்!

16 நீள நினைந்த போது!

17 பதிகங்களைப் படியுங்கள்!

## உள்ளடக்கம்


18 திரித்தல்!

19 வள்ளுவம்!

20 தமிழன்னை நான்மணிமாலை

21 புறநானூறு புகலும் விளக்கம்!

22 Children Learn What They Live!

23 Bharathan In Kamba Ramayanam

24 பூ மழை

26 மைதிலி சரண் குப்தரின் ‘பஞ்சவடி’

27 ஒரு சர்வாதிகாரியின் மறுபக்கம்

28 எல்லாம் தமிழ்!

29 அறிவரசன் துணையகராதி!

30 புகழ் வணக்கம்!

31 இருமொழித் தோரணம்!

## இயல் – 7

### செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

தமிழின் தொன்மை, தனித்தன்மை, தமிழர்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்புகளைக் கவனத்தில் கொண்டு பின்வருவனவற்றை முதன்மையான குறிக்கோளாக இந்நிறுவனம் கொண்டுள்ளது.

- இந்தியப் பண்பாட்டின் பன்முக இயல்பு பற்றியும், இந்தியப் பண்பாட்டிலும், மரபிலும் தமிழியக் கூறுகளின் பங்களிப்புப் பற்றியும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு ஊக்கமளித்து மேம்படுத்துதல்.
- பல்துறை சார்ந்த அறிஞர்களை ஒருங்கிணைத்துத் தமிழின் தொன்மை குறித்து ஆராய்தல். தமிழ் பிற திராவிட மொழிகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்தல்.
- திராவிட மொழிகளின் வரலாற்று ஒப்பாய்வையும், வரலாற்று முறையில் தமிழ் வழக்காறுகள் குறித்த ஆய்வையும் மேற்கொள்ளுதல்.
- 41செவ்வியல் தமிழ் நூல்களையும் உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடுதல்.
- செவ்வியல் காலத்திற்குட்பட்ட 41 நூல்களையும் சுவடிகள், பழம்பதிப்புகள், உரைமேற்கோள்கள் கொண்டு ஒப்பிட்டு மரபுவழி மூலபாடச் செம்பதிப்புகளை உருவாக்குதல்.
- முதுகலை, முனைவர், முனைவர் பட்ட மேலாய்வு உள்ளிட்ட பட்டப் படிப்புகளில் செம்மொழித் தமிழைக் கற்கவும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பை உருவாக்குதல்.
- கல்வி நிறுவனங்களிடமிருந்தும். தனிநபர்களிடமிருந்தும் செம்மொழித் தமிழாய்வு தொடர்பாகப் பெறப்படும் ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல்.
- செம்மொழித் தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் தேசிய, பன்னாட்டு கருத்தரங்குகள், பயிலரங்குகள், பணியரங்குகளை நடத்துதல்; தகுதி வாய்ந்த கல்வி நிறுவனங்களுக்கு அவற்றை நடத்துவதற்குத் தேவையான நிதியுதவி அளித்தல்.

## CHAPTER – 7

### CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL, CHENNAI

The CICT aims to focus on the antiquity, uniqueness of Tamil language and literature, and the civilization and culture of the Tamils, with the following objectives.

- Encouraging and promoting research on the multi-faceted nature of Indian culture and the contribution of Tamil components to Indian culture and heritage.
- Combining multidisciplinary scholars to study the antiquity of Tamil. Studying the impact of the Tamil language on other Dravidian languages.
- Conducting historical comparative studies of Dravidian languages and historical studies of Tamil dialectology.
- Translating and publishing the ancient 41 Classical Tamil Texts into world languages and Indian languages.
- Compilation of Critical Editions of 41 Tamil texts from the classical period with the aid of Palm leaf Manuscripts, old editions of handwritten manuscripts, and textual citations aims to publish the most authentic original texts of 41 Classical Tamil texts.
- Creating opportunities to study and research Classical Tamil in Postgraduate, Doctoral and Post-Doctoral levels.
- Funding research projects received from educational institutions and individuals in connection with the study of Classical Tamil.
- Conducting national and international seminars, and workshops to showcase the specialties of Classical Tamil; The Central Institute of Classical Tamil is implementing a program to provide financial assistance to the interested universities and other educational institutions by conducting national and international seminars, and workshops aimed at enriching classical Tamil studies.




# நூலேணி

13

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்




நூலின் பெயர் : தொல்காப்பியம் எழுத்ததிகாரம் – தொகை மரபு,
நூலாசிரியர் : ஆ. சிவலிங்கனார்
பதிப்பாண்டு : 1982
விலை : ரூபாய் 90/–
பக்கங்கள் : 184
வெளியீட்டு எண்: 49




நூலின் பெயர் : தமிழ் இலக்கியக் கொள்கை –7
நூலாசிரியர் : ச.வே. சுப்பிரமணியன், ர. விஜயலட்சுமி (பதி)
பதிப்பாண்டு : 1982
விலை : ரூபாய் 15/–
பக்கங்கள் : 175
வெளியீட்டு எண் : 50




நூலின் பெயர் : தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கம்
நூலாசிரியர் : ஆ. சிவலிங்கனார் (பதி)
பதிப்பாண்டு : 1982
விலை : ரூபாய் 20/–
பக்கங்கள் : 504
வெளியீட்டு எண் : 51




நூலின் பெயர் : கும்மிப் பாடல்கள்
நூலாசிரியர் : ஏ.என். பெருமாள் (பதி)
பதிப்பாண்டு : 1982
விலை : ரூபாய் 16/–
பக்கங்கள் : 400
வெளியீட்டு எண் : 52

ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறாருகே

ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே,

பேடைக் குயிலிதனைப் பேசியது: – வானரரே!

ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மைதான்

எப்பிறப்புக் கொண்டாலும், ஏந்தலே! நின்னழகைத்





பேதம் வளர்க்கப் பெரும்பெரும் புராணங்கள்!

சாதிச்சண் டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்!

கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்

கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்,



# நித்திரை நீக்கும் நிகழ்வுகள்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விழைவின்படி தை மாதமே தமிழ்ப் புத்தாண்டாக மக்கள் விரும்பி ஏற்றிருப்பதாலும், தமிழ் இலக்கியங்கள் காட்டுவது போன்று தை மாதம் பொங்கலும் அறுவடையும் புத்தாண்டினை கொண்டாடத் தகுதி அளித்துள்ளது.

பள்ளி மாணவர்களின் தேர்வு முடிந்து விடுமுறை இத்திங்களில் தொடங்கியுள்ளது. சுற்றுலாப் பயணிகள் சுறுசுறுப்பாக அங்கிங்கெனாதபடி புறப்பட ஆரம்பித்துள்ளனர். கோடைகால குளிர் நகரங்கள் செல்ல குடும்பங்கள் தயாராகியுள்ளனர். சித்திரை மாதம் திருவிழா மாதமாக மதுரை எங்கும் விழாக்கோலம் காணத் தொடங்கியுள்ளது. சுட்டெரிக்கும் வெயில் மக்களை வியர்வையில் வறுத்து எடுத்தாலும் வண்ண மலர்கள் பல மலர்வதும் இனிக்கும் கனிகள் பல இறங்குவதும் மகிழ்ச்சியைத் தருகின்றன. மீனாட்சி அம்மன் திருமணமும் அழகர் ஆற்றில் இறங்குவதும் என மதுரையைச் சுற்றியுள்ள ஊர்களோடு, அனைவரும் குதூகலமாக குடும்பத்துடன் கொண்டாடத் தயாராகி விடுவர். மீனாட்சி அம்மன் திருமண நாளில் ஆயிரக்கணக்கான மணமான பெண்கள் தங்கள் கழுத்திலும் புதுத் தாலி மாற்றிக் கொள்வது வழக்கமாகும். கோடை காலத்தில் அம்மன் கோயில்களில் திருவிழாக்கள் முளைப்பாரிவைத்து காப்பு கட்டி வழிபடுவது வெகு விமரிசையாகக் கிராமங்கள் தோறும் நடைபெறுவது வழக்கம். சித்திரை மாதத்தில்தான் சித்ரா பௌர்ணமியோடு இராமன் அவதரித்த நாளான இராமநவமியும் கொண்டாடப்படும். இசுலாமியர்களின் பெருநோன்புப் பண்டிகையும் கிறிஸ்தவர்களின் இயேசு உயிர்த்தெழுந்த புனிதத் திருநாளும் இத்திங்களில் கொண்டாடப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

சாதி பேதமற்ற சமுதாயம் படைக்க வைணவ குலத்தில் தோன்றி வையகம் தழைக்க தமர் உகந்த திருமேனி எனப் போற்றப்படும் ராமானுஜர் அவதரித்ததும் இம்மாதத்தில்தான் என்பது இன்பம் பயக்கும் செய்தியாகும். காலம் சார்ந்த கோவில் வழிபாடுகள் அக்காலங்களில் மக்களிடையே ஏற்படும் பஞ்சம் பட்டினி பிணி தொழில் மற்றும் நம்பிக்கைகள் சார்ந்து வந்துள்ளன.

கோடைகாலங்களில் மக்களிடையே அம்மை பரவுவது அக்காலங்களில் வழக்கம். தடுப்பூசி அறிவியல் பரவாத காலம் முதல், அம்மை என்பது அம்மனின் கோபம் என்ற நம்பிக்கையே வேரூன்றி இருக்கிறது. அதன் பரவும் தன்மையும், கொத்துக்கொத்தாக மக்கள் மாய்ந்து போனதையும் முகம் உடல் முத்துக்கள் போன்ற நீர் கோர்த்து, உக்கிரமான உடல் உஷ்ணத்தை எழுப்பும் காய்ச்சல் என்பதால் அம்மனின் ஆத்திரம் தணிக்கச் சித்திரை அம்மன் விழாக்கள் தொடங்கி இருக்கலாம் என நாட்டார் வழக்க ஆய்வு தெரிவிக்கின்றன.

அம்மையும் வைரஸ் கிருமிதான் எனத் தெரிந்து தடுப்பூசி பரவலாக, நோயினைக் குறைத்ததற்கு பின் கோவிட், ஒமைக்ரான் H1N1 போன்ற வைரஸ் காய்ச்சல்களை பரப்பளவு தொடங்கியுள்ளன. தக்க தடுப்பூசிகள் வந்த பின்னும் இன்றும் தெய்வத்திற்கு வேண்டுதலையும் விழாக்கள் எடுப்பதிலும் நம் சடங்குகளின் தொன்மை மாறுபடவில்லை என தெரிகிறது. அகந்தூய்மைக்கு முகக் கவசமும் புறந் தூய்மைக்கு நீரும் சானிடைசரும் சோப்பும் பயன்படுத்தித் தொற்றிலிருந்து காத்துக் கொள்வோம்.

கத்திரி வெயிலில் உடல் உழைப்பையே நம்பி இருப்போர் அதிக நீர் அருந்திக் கொள்ளுதல் அவசியம். உடை ஒரு தேகத்தினுடைய பருவகாலச் சூழலுக்கு ஏற்ப பரிணமித்துள்ளது. மரபும் புதுமையும் காலம் என்கிற பரிணாமம் பழைய சமூக அமைப்பை பாதுகாத்து அதன் மேல் புதிய அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதுதான் வளர்ச்சி என்று உணர வைப்பதுதான் புதிய சிந்தனையாகும்.

புதிய சாதனங்களால் குளிர்பதன முறைகளை கைக்கொண்டும் பழங்கால வாழ்க்கை முறை காட்டிய குளிர்ச்சியான உணவு முறைகளும், குடிக்கும் நீர்மோர் வரை நுட்பமாகவும் மென்மையாகவும் நம் பண்பாட்டின் அடித்தள உறுதியினைக் காப்போம்.

ஆயிரம் கல்லூரிகளில் 200 சொற்பொழிவுகளோடு 100 நிகழ்வுகளாக ஒரு இல்ட்சம் மாணவர்கள் பயன்படும் வகையில் சித்திரைத் திங்கள் 11ஆம் நாள் அன்று அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவின் 100ஆவது நிகழ்வில் தலைமையேற்று சிறப்புரையாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் போற்றும் என்பது திண்ணம்!






இளங்கோவடிகள் வேந்தர் குலத்திற் பிறந்தவர், உயர் கல்வி பெற்று வளர்ந்தவர். கணியன் கூறியபடி அரசாளும் திருப்பொறி வாய்ந்தவர், காதலை வெறுத்தோ – கடமைக்கு அஞ்சியோ இவர் துறவு மேற்கொள்ளவில்லை. மூத்தவன் ஆளும் அரச மரபு பிறழக்கூடாது என்பதற்காகவே துறவு மேற்கொண்டார். அடிகளான பின்னுங் கூட "குடக்கோச்சேரல் இளங்கோ" என்றே குறிப்பிடுகிறார்.

செந்தமிழ்ச்செல்வியின் காற்சிலம்பு காரணமாக அருந்தமிழ் அன்னைக்கு நூற்சிலம்பு அணிவித்த பெருமை இளங்கோவடிகளைச் சாரும். குலத்தாலும் – குணத்தாலும், அரசியல் நெஞ்சம் வாய்ந்த ஒரு புலவர், காப்பியம் இயற்றினார் என்றால் சிலப்பதிகாரத்தின் சிறப்புக்கு வேறென்ன மாண்புகள் வேண்டும். "திங்களையும் – ஞாயிற்றையும் – மழையையும் – புகாரையும் போற்றுவோம் வாரீர்" என்று அழைக்கின்றார். இளங்கோவடிகளின் சிலம்பின் தொடக்கமே நாட்டுப்பாடலாக ஒலிக்கின்றது. புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற தலைப்புக்களும் நாட்டு உணர்வைப் பெருக்குகின்றன; நமக்குச் சிலப்பதிகாரம் பலவற்றை உரிமையாக்குகிறது.

இளங்கோவடிகள் தந்துள்ள சிலப்பதிகாரம் "முத்தமிழ்க்காப்பியம்" எனப் பெயர்பெற்றது. இயற்றமிழான உரைநடைப் பகுதிகளான – இசைத்தமிழான பாடல் தொகுப்புக்களாகவும் காப்பியம் முழுவதுமே நாடக நூல் என்று புலவர் உலகமும் – நாடகக் கலைஞர் உலகமும் ஒருமனதுடன் ஒப்புக்கொள்ளும் உண்மையுடையதாக பொலிகிறது.

தமிழ், இயல் – இசை – நாடகம் என்ற மூன்று கூறுகளைக் கொண்டது என்பது சிலப்பதிகாரத்தின் மூலம் தான் முதன்முதலில் உலகுக்கு அறிமுகமானது. அதற்கும் பின்னர் தான் "முத்தமிழ்" என்னும் சொல் புலவர் உலகில் வழக்கிற்கு வந்தது.

தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. 1892 இல் முதன்முதலாகச் சிலப்பதிகாரம் முழுவதையும் உரைகளுடன் வெளியிட்டார். தமிழில் தோன்றிய ஆதி காவியம் என்ற தனிப்பெருமை சிலப்பதிகாரத்துக்கு மட்டுமே உள்ள சிறப்புரிமையாகும்.

பூம்புகாரைப் புதுக்கியவர், கடற்கரையில் கண்ணகியை மீண்டும் கொண்டுவந்து நிறுத்தியவர் என்ற பெருமைக்கெல்லாம் உரிமை பூண்ட தமிழ்நாடு அரசின் மேனாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னை, அண்ணா சதுக்கத்தில் 07.11.1971இல் சேரன் தம்பி இளங்கோவடிகளுக்கு சிலை அமைத்த பெருமைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது. நெஞ்சில் நிலைபெற்றுவிட்ட சிலப்பதிகாரம் அழகிய உரைநடை நாடகமாய் அவரால் ஆக்கப் பெற்றுள்ளது என்பதை தமிழ்கூறு நல்லுலகம் நன்கறியும்.



இத்தகைய சிறப்பு மிக்க இளங்கோவடிகளைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் 24ஆம் நாளன்று சென்னை அண்ணா சதுக்கத்திலுள்ள இளங்கோவடிகள் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வகையில், 24.04.2023 திங்கள் கிழமை அன்று காலை 9.30 மணிக்கு இளங்கோவடிகள் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.



## மாண்புமிகு அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை!

மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் 06.04.2023 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையின் தொடர்ச்சி . . . .

அந்தக் காலத்திலிருந்து நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால் தமிழின் வரி வடிவங்கள் வேண்டுமானால் மாறியிருக்கலாம், 'தமிழி' என்றிருக்கக்கூடிய தமிழ் பிராமி எழுத்துகள் இருந்தன. வட்டெழுத்துக்களாகவும் இருந்தது. 9ஆம் நூற்றாண்டு எழுத்துகளாக இருந்தது, தொடர்ச்சியாக தமிழ் எழுத்தின் வரி வடிவம் மாறியிருக்கிறது. ஆனால் தமிழிலே வரக்கூடிய சொற்கள் மாறாமல் இருந்த காரணத்தினால்தான். தொல்காப்பியத்திலிருந்து இன்றுவரை 20ஆம் நூற்றாண்டு, 21ஆம் நூற்றாண்டு வரை நான் குறிப்பிட்ட ஒன்றிரண்டை மட்டும் சொல்லி நிறைவுசெய்ய விரும்புகிறேன். அந்தச் சொற்கள் அப்படியிருக்கும்.

தொல்காப்பிய சூத்திரத்தில் சொல்லும்போது, தொல்காப்பியர் சொல்கிறார். 'எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே' இதற்கு நான் உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. 'எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே' என்பதை நான் சொன்னால், உங்களால் அந்தப் பொருளை புரிந்து கொள்ள முடிகிறது.

புறநானூற்றுக்குப் பிறகு சங்க இலக்கியத்தை எடுத்துக்கொண்டால்.

'நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

என்று அவர் சொல்கின்றபோது,

'அதனால் யான்உயிர் என்பது அறிகை

வேண்மிகு தானை வேந்தர்க்குக் கடனே' என்று சொல்கின்றபோது, அதற்கான விளக்கத்தை நான் உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை.

காப்பியக் காலத்தில் சிலப்பதிகாரம், "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்று சொல்லி நான். அதைச் சொல்கின்றபோது அதற்கான விளக்கத்தை இன்றைக்கு இருக்கக்கூடிய நீங்கள் எளிதாக புரிந்து கொள்ள முடியும்,



பக்தி இலக்கிய காலத்திற்கு வாருங்கள்.

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைந்து,

மின்னார் செஞ்சடைமேல் மிளிர்

கொன்றை யணிந்தவனே,

மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே,

அன்னே உன்னையல்லால் இனி

யாரை நினைக்கேனே'

என்று அன்றைக்கு நாவுக்கரசர் பாடினார்.

'ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்குழ

வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்

தேனார்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்

மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே'

என்று ஆழ்வார்கள் பாடினார்கள். அதற்கு இன்றைக்கும் நான் அர்த்தம் சொல்ல வேண்டியதில்லை. நான் சொல்கின்ற போது, அந்த அர்த்தத்தை உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

*பெருகும் . . . . .*





## தேன்துளி — 1

8. 4. 1948 அன்று ஜெமினி எஸ் எஸ் வாசன் தயாரித்த சந்திரலேகா திரைப்படம் முதன்முதலாக திரையிடப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக ரூபாய் முப்பது இலட்சம் அளவில் தயாரிக்கப்பட்ட மாபெரும் வெற்றிப்படம் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் திரையிடப்பட்டு ரூபாய் நான்கு கோடி வருவாய் ஈட்டிய சாதனைப் படமாகும்.

கேளிக்கை வரியாக ரூபாய் 1.5 கோடியும் திரையரங்கு உரிமையாளர்கள் விநியோகஸ்தர்களுக்கு ரூபாய் 1.25 கோடியும், விளம்பர செலவினத்திற்கு 25 இலட்சமும், பிற வரிகளுக்கு 25 இலட்சமும், எஞ்சிய 75 இலட்சம், பிற நிதிச் செலவினங்கள், வங்கி கடன் மற்றும் வட்டி செலவு, போக சில இலட்சம் தான் தயாரிப்பாளருக்கு கிடைத்தது என்று திரு எஸ் எஸ் வாசன் தன்னுரையில் சொன்னதை எழுத்தாளர் அசோகமித்திரன் எழுதியிருந்தார் ..




## தேன்துளி — 2

இந்த உலகம் துன்பம் நிறைந்தது. இது நிலை இல்லாதது, பொய்யானது, மாயமானது என்றுதான் அனைத்து சமயங்களும் குறிப்பிடுகின்றன.

ஆனால், இந்த உலக வாழ்க்கையைக் கண்டு அஞ்சக் கூடாது. நல்ல நெறியை, நல்ல ஒழுக்கத்தைப் பின்பற்றி வாழ்கின்றவர்களுக்கு எந்தத் துன்பமுமில்லை. இந்த உலக வாழ்வில், நல்ல வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்கின்றவர்களுக்கு நன்மையும், நல்ல வளமையும் கிடைக்கும் என்பதில் ஐயமுமில்லை.

மேல் உலகம் எனும் வீடு பேற்றில் எத்தகைய சிறப்பு, இன்பம் போன்றவை கிடைக்கும் என்று நாம் நம்புகிறோமோ அவை அனைத்தும் இந்த உலகத்திலேயே கிடைக்கிறது.
உலக வாழ்வை வெறுக்காமல், இந்த உலகில் பற்று கொண்டு, நல்லெண்ணத்துடன் நல்வாழ்க்கை வாழ வேண்டும் என்று புதியதொரு கருத்தைக் குறிப்பிடும் திருவள்ளுவர், சமயக் கருத்தாளர்களுக்கு மாறுபட்ட கருத்தினைக் கொண்டவர். அவரைக் குறிப்பிட்ட சமயத்தவர் என்றும், அவர் இயற்றிய திருக்குறள் நூலைக் குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்தது என்றும் கருதுகிற பார்வையை மாற்றிட வேண்டும்.





# சேரமன்னர் வரலாறு !

உரைவேந்தர் ஔவை துரைசாமி

115

நெடுஞ்சேரலாதன் முடிசூடிக்கொண்ட போது வேந்தர் எழுவர் முடிப்பொன்னாற்செய்த பொன்னாரம் ஒன்று வழிவழியாக வரும் முறைப்படி அவன் மார்பிலும் அணியப் பெற்றது. அதன் கருத்தை உணர்த்த வந்த சான்றோர், 'தம்மவர் அல்லாத பிற வேந்தரை வென்றால், அவர் முடிப்பொன் கொண்டு கழல் செய்து கொள்வது தமிழரசர் மரபு; ஒரு காலத்தே சேர நாடு எட்டுச் சிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது; மன்னர் எண்மரும் தனித்து நிற்பின் பகைவர் தம்மை வெல்லற்கு எளிதாம் என எண்ணித் தம்மில் ஒன்றுபட்டு ஒருவர் முடிவேந்தராக ஏனையோர் அவர்க்குத் துணைவராய்ப் பிரிவின்றி ஒழுகுதல் வேண்டும் என்று உறுதிசெய்து கொண்டனர் என்றும் 'அவ் வொற்றுமைக் குறிப்புத் தோன்ற ஏனை எழுவர் முடிப்பொன்னால் ஆரம் செய்து மார்பில் அணியாகப் பூண்டனர்' என்றும் எடுத்துரைத்தனர்.

இதைக் கருத்துட்கொண்டே எண்மரும் கூடியிருந்து ஆராயும் அரசியற்குழு எண்பேராயம் எனப்பட்டது; பின்பு நாளடைவில் எண்பேராயம் வேறு வகையில் இயலுவதாயிற்று. இவ்வாறே பாண்டிநாடு ஐம் பெரும் நாடுகளாகப் பிரிந்திருந்தது, பின்பு ஐம் பெருந்தலைவரும் தம்மில் ஒருவராய் இயைந்ததனால் பாண்டியர் பஞ்சவர் எனப்பட்டனர்; இக் குறிப்புத் தோன்றவே ஐம்பெருங் குழு என்னும் அரசியலாராய்ச்சிக் குழு தமிழ் வேந்தர் அரசியலில் இடம் பெறுவதாயிற்று.

சேரரினும் பாண்டிர் பழையராதலின், அவரால் உளதாகிய ஐம்பெருங் குழு முன்வைத்தும், எண்பேராயம் பின் வைத்தும் சான்றோ ராற் குறிக்கப்படுகின்றன. சேரநாட்டு எண்பகுதிகளும் குட்டநாடு, பொறைநாடு, குகட நாடு, கொண்கான நாடு, வான நாடு, பாயல் நாடு, கடுங்கோநாடு, பூழி நாடு என்பன. பாண்டிய நாட்டு ஐம் பகுதிகளும், மதுரை, மோகூர், கொற்கை, திருநெல்வேலி (பழையன் கோட்டை), கருவை என்ற ஊர்களைத் தலைமையாகக் கொண்டவை.

இவற்றை எல்லாம் கருத்தூன்றி நோக்கிய நெடுஞ் சேரலாதனுக்கு, இமயம் சென்று அதனை எல்லை யாக்கிக் கோடற்கு எழுந்த வண்ணம் பேரூக்கத்தால் உந்தப் படுவதாயிற்று. எண்பேராயத்தை ஒருங்கு கூட்டித் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். எல்லோரும் அவன் கருத்தைப் பாராட்டினர்; ஏனைச் சோழ பாண்டி யர்க்குத் திருமுகம் போக்கி அவர் கருத்தை அறிய முயன்றான். அந் நாளில் சோழ பாண்டியர்கள், தமிழர் என்ற இனவொருமையால் கருத்தொருமித்து இமயத்தைத் தமிழ்க்கு வரம்பாகச் செய்யும் சேரமான் முயற்சியை வாழ்த்தித் தங்கள் நாட்டினின்றும் இரு பெரும் படைகளை விடுத்துத் துணை செய்தனர்.

இமயச் செலவுக்கெனச் சேரநாட்டிலும் பெரும்படைதிரண்டது. யானை, குதிரை, தேர் என்ற படைவகைகளும் வில் வேல்வாள் முதலியன ஏந்தும் படைவகைகளும் அணியணியாய் இமயம் நோக்கிப் புறப்பட்டன. இவ்வாறு எழுந்த சேரப்படையுடன் சோழப்படையும் பாண்டிப்படையும் கலந்து கீழ்க்கடலும் தென்கடலும் மேலைக் கடலும் ஒன்று கூடி இமயம் நோக்கி யெழுந்ததுபோல நிரந்து செல்லலுற்றன.

அந் நாளில் கொண்கானத்துக்கும் வடவிமயத்துக்கும் இடையிற் கிடந்த நாடு ஆரியகம் என்ற பெயர் பெற்று விளங்கிற்று. அந் நாளிற் போந்த மேலைநாட்டு யவனர் குறிப்புகளும் அப் பகுதியை ஆரியகம் (Ariake) என்றே குறித்துள்ளன. ஆங்கு வாழ்ந்த சதகன்னரும் மோரியருமாகிய ஆரிய மன்னர் தமிழ்ப்படையின் வரவுகண்டு இறும்பூதெய்தினர். படையின் பெருமை அறியாது பகை கொண்டு எதிர்த்த வேந்தர் சிலர் வலி தொலைந்து ஒடுங்கினர்; பலர் பணிந்து திறைதந்து நண்பராயினர் நெடுஞ்சேரலாதன் நினைந்தது நினைந்தவாறே நிறைவேறியது பற்றி மனம் மகிழ்ந்து இமயத்தில் தன் விற்பொறியைப் பொறித்துவிட்டுத் திரும்பினான். ஆரிய நாட்டினர் கொடுத்த பொன்னும் பொருளும் பொற்பாவைகளும் இமயச் செல்வின் ஊதியமாகச் சேர நாடு வந்து சேர்ந்தன.

சேரமான், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற நெடும் புகழால் சிறப்புற்றான். தன்னொடு போந்த தானைத் தலைவர் கட்கும் துணைவர் கட்கும் பரிசிலர்க்கும் தக்க வரிசை களைச் செய்து மகிழ்வித்ததோடு சோழ பாண்டியப் படைத் தலைவர்கட்கும் உரிய சிறப்புகளைச் செய்து இன்புறுத்தினான்.

*வளரும் . . .*



# ஆங்கிலம் அரும்பிய அரசும் - வாழ்வும்... !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம் திரு. செல்லத்தம்பி
சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

114

இன்னுமோர் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். SIT (சிற்) என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இதிலே உள்ள i என்பது நெடில் என்று காட்ட வேண்டுமானால், சொல்லினிறுதியில் ஒலியற்ற மவுனமான “e” ஐ (silent “e”) சேர்க்கவேண்டும். அப்போது அது சைற் (site) என்று ஒலிக்கப்படும். SIT என்பதிலுள்ள “e” குறிலாக ஒலிக்கப்படவேண்டும் என்று காட்டவேண்டும் மென்றால், உயிரெழுத்தை அடுத்துவருகின்ற t என்ற மெய்யெழுத்து இரட்டிக்கவேண்டும். அப்படி இரட்டித்தால் அது சிட்டிங் (Sitting) என்று குறிலாக ஒலிக்கப்படும்.

அதாவது, ஒரு சொல்லின் ஈற்றில், ஒலிக்கப்படாத வந்தால், அதற்கு முன்னர் வருகின்ற உயிர் நெடிலாக ஒலிக்கப்படவேண்டும் என்பது ஆங்கில எழுத்துக்கூட்டல் விதி. ஒரு சொல்லில் வருகின்ற உயிரெழுத்துக்குப்பின்னர் வருகின்ற மெய்யெழுத்து இரட்டித்தால் முன்னருள்ள உயிரெழுத்துக் குறிலாக ஒலிக்கப்பட வேண்டும் என்பதும் அத்தகைய ஒரு விதிதான்.

1066ஆம் ஆண்டுக்கு முன்னிருந்த ஆங்கிலோ சாக்சன் குருமார்கள், மேற்படி யுத்தியை ஏன் கடைப்பிடிக்கவில்லை என்று வாசகர்கள் கேட்கலாம். இலத்தீன் மொழியின் தாக்கத்தைப் பெருமளவில் பெற்றிருந்த பழைய ஆங்கிலத்தில், எல்லா எழுத்தும் ஒலிக்கப்படவேண்டும் என்ற நியதி இருந்ததால், ஒலியற்ற (silent "e”) என்பதை அவர்களால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. அதுதான் உண்மை.

பழைய ஆங்கிலக் காலப்பகுதியில், ஒரு சொல்லின் கடைசி எழுத்து, உயிர் எழுத்தாக இருந்தால், அந்த இறுதி எழுத்தும் ஒலிக்கப்பட வேண்டும் என்பது விதி. Hete (Hate) என்ற சொல் "ஏற்ரே" என்றே ஒலிக்கப்பட்டது. அதாவது, சொல்லின் இறுதியிலுள்ள “e” என்ற உயிரும் ஒலிக்கப்படவேண்டியிருந்தது. மெய்யெழுத்தை இரட்டித்தாலும் அவற்றை நீட்டி ஒலிக்க வேண்டும் என்ற நியதி இருந்தது.

ஆனால் நோமண்டியிலிருந்து பிரெஞ்சுச் சொற்கள் வந்து குவியத் தொடங்கிய பின்னர், ஆங்கில உச்சரிப்பில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. சொற்களின் ஈற்றில் வருகின்ற "e" என்ற உயிரை ஒலிக்கின்ற பழக்கம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது. அதாவது Hete என்பதை “ஏற்ரே" என்று ஒலிக்கின்ற பழக்கம் போய், “ஏற்” என்று ஒலிக்கின்ற பழக்கம் தொடங்கியது.

இந்த Hete தான் பிற்காலத்தில் Hate என்று மருவியது. இரட்டித்த மெய்களை நீட்டி ஒலிக்கின்ற பழக்கமும் மெல்ல மெல்ல மறைந்தது. cuddle, muddle, riddle என்பவற்றைக் கட்டில் மட்டில் றிட்டில் என்று நீட்டி ஒலிக்கின்ற பழக்கம் போய், கடில், மடில், றிடில் என்று குறுக்கி ஒலிக்கின்ற வழக்கம் வளர்ந்தது. ஏற்கெனவே ஒரு சொல்லின் இறுதியில் “e” என்ற உயிர் இருந்தால், அதனை நீக்காமல், அதன் ஒலியை மட்டும் நீக்கி வாசித்தார்கள். Hete ஆக இருந்து Hate ஆக மாறிய சொல், “ஏற்” என்று உச்சரிக்கப்படுவது அதனாலேதான்.

அப்படியொரு விதியை நிர்ணயித்திருந்தும், சொற்களை எழுத்துக் கூட்டும் முறையில் தாறுமாறுகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. ஆகவே திட்டவட்டமான முறையில் எழுத்துக்கூட்டலைச் சீரமைக்க வேண்டிய தேவை தொடர்ந்தும் இருந்தே வந்தது.

இன்று இலங்கையிலிருந்து அல்லது தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற புதிய ஒரு தமிழ்ச் சொல், இலண்டனில் அறிமுகமானால், அதை ஆங்கிலத்தில் எழுதுவதற்கு ஆங்கிலேயர் எவ்வாறு இடர்ப்படுவார்களோ அவ்வாறே அன்றைய ஆங்கிலேயப் படியெழுதுவோரும், புதிய பிரெஞ்சுச் சொற்களை எழுத முயன்றபோது இடர்ப்பட்டார்கள்.

*வளரும் . . . .*

## 4. பகுத்துணர்வும் மாதரும்

மாதர்களுடைய நன்மையையும் முன் ஏற்றத்தையும் நாடி அவர்களுக்கு முதன்மையாக வேண்டுஞ் சிலசிறந்த பொருள்களை இங்கே சிறிது விளக்கிச்சொல்வோம். நமது தமிழ்நாட்டைத் தவிர, மற்ற நாடுகளிலிருக்கும் பெண்மணிகள் கல்வியிலுங் கடவுள் வணக்கத்திலும் நாகரிக ஒழுக்கத்திலும் நாளுக்குநாட் பிறைபோல் வளர்ந்து மிகவும் இனிதாக உயிர்வாழ்கின்றார்கள். நமது தமிழ்நாட்டு மாதர்களோ சிறந்த கல்வி உடையவர்களும் அல்லர்; உண்மையான கடவுளை வணங்கத் தெர்ந்தவரும் அல்லர். உண்ண உணவும், உடுக்கத் துணியும், இருக்க இடமுங் கிடைத்தால்போதும் என்றும், இவைகளுக்கு வறுமைப்படாமல் வாழ்வதே இன்பவாழ்க்கை என்றும் நினைத்து, உணவு, உடை, இருப்பிடம் என்னும் இவைகளைத் தேடிக்கொள்வதிலும், தேடிய இவற்றை உண்டு உடுத்து உறைவிடமாக்கி உறங்கிக் கழிவதிலுந் தம் வாழ்நாளைக் கடத்தி வருகின்றார்கள்.

உயர்ந்த அறிவாவது உயர்ந்த நோக்கமாவது நம் பெண்மக்களுக்குச் சிறிதும் இல்லை; அல்லது உயர்ந்த அறிவையும் உயர்ந்த நோக்கத்தையும் பெறல்வேண்டுமென்னும் விருப்பமாவது இவர்களுக்கு இருக்கின்றதோ வென்றால், அதுதானும் இல்லை. உண்டு உடுத்து உறங்கி வாழ்நாட் கழிப்பதைவிட மக்களால் அடையத்தக்க வேறு சிறந்த பொருள் இல்லையென்று பெரும்பாலார் நினைக்கின்றார்கள்.

அப்படி நினைத்தால் மக்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் வேற்றுமை யாது ? மக்களிலுந் தாழ்ந்த ஆடு மாடு குதிரை முதல் ஈ எறும்பு புழு ஈறான எல்லாச் சிற்றுயிர்களுங் கூடப், பசியெடுத்தபோது தமக்கு எளிதிலே கிடைக்கும் புல், இலை, தழை, கிழங்கு, கனி, தேன் முதலான இரைகளைத் தேடி உட்கொண்டும், மலையருவி ஆறு, ஏரி, குளங் கூவல் முதலியவற்றின் நீரைப்பருகியும், பசிதீர்ந்தபின் மரங்களின் அடியிலோ செடிகளின் நடுவிலோ மலைப் பிளவுகளின் இடையிலோ கிடந்துங் கவலையின்றி உறங்கிக் காலங்கழிக்கின்றன; மக்களுக்காவது உடுக்க ஆடை வேண்டும்; இச் சிற்றுயிர்களுக்கோ ஆடையும் வேண்டுவதில்லை; மழையில் நனையாமலும், பனியில் குளிராமலும் வெயிலில் பெதும்பாமலும் அவ் வுயிர்களைப் பாதுகாக்க தடிப்பான தோலோடு அடர்த்தியான மயிரையுங் கம்பளிப் போர்வைபோல் அவைகளுக்கு இறைவன் கொடுத்திருக்கின்றான்.

வெப்பம் மிகுந்த நமது தமிழ்நாட்டிலுள்ள ஆடுமாடுகளுக்குக் குளிரின் துன்பம் மிகுதியாய் இல்லாமலையால், அவைகளின் உடம்பின் மேல் அடர்ந்து நீண்ட மயிர்கள் இல்லை. ஆனால் வடக்கே இமயமலையிலும். அம் மலைச்சாரலில் உள்ள இடங்களிலும் போய்ப் பார்த்தால், அங்குள்ள ஆடுமாடுகளுக்கு அடர்ந்து நீண்ட மயிர்களிருத்தலைக் காணலாம். ஏனென்றால், அம் மலைநாடுகளில் தாங்கமுடியாத பனியுங் குளிரிலும் அவ்விலங்குகள் வெற்றுடம்பு உள்ளனவாயிருந்தால், அவை உடனே விறைத்து மாண்டுபோகும். ஆதலால், அவ் வாடுமாடுகள் அங்குள்ள பனியிலுங் குளிரிலும் மாண்டு போகாமல் அவற்றைப் பாதுகாப்பதற்காகவே எல்லா இரக்கமும் உள்ள கடவுள் அவைகளின் உடம்பின்மேல் நீண்டு அடர்ந்த மயிரை வளரச் செய்திருக்கின்றான்.

ஆகவே, உணவின் பொருட்டும் மக்களாகிய நாம் ஓயாமல் அடையுங்கவலையுந் துன்பமும் நம்மிற் றாழ்ந்த சிற்றுயிர்களுக்குச் சிறிதும் இல்லை. வேண்டும்போது இரைதேடித் தின்றும், உறக்கம் வந்தபோது உறங்கியும், ஆணும் பெண்ணுமாய்க் கூடித் தம் இனங்களைப் பெருக்கியும் அவைகள் கவலையின்றிக் காலங்கழிக்கின்றன.

*வளரும் . . . .*



Every where that he visited during the recent political tours, sight-starved mobs in hundreds and thousands feverishly flocked to feast their eyes with the panorama of a Maharajah of legendary luxury. They expected to see a Majestic King, dressed in multicoloured drapery and surrounded by a train of retinue, with colour, sound and plenty covering his imperious route. They were staggeringly disappointed in their wild expectations. Having scrambled and stared in vain for a purple-robed figure with a be jewelled diadem, every villager with evident disappointment asked "Pray, where is the Maharajah?" His simple, immaculate and spotless attire attuned to the colour of the silvery hair of close-cut crop, constitutes a picture of amiable sweetness. His unaffected look and unassuming bearing take his spectators captive from right and from left. The flawless snow-white hue playing about his appearance from top to toe has wrought a mightier revolution in ideas than the mighty crimson hue has wrought in deed in Russia.

The Maharajah of Pithapuram has shocked the populace in the South into a sobered conception of royalty which is none the less worshipful for the absence of sartorial splendour. This is his primary contribution to the growth of democracy and healthy ideology. The tearful eyes, the quivering lips and the palpitating heart, with a delivery of words that is dragging, slow and deliberate, in a tone that is quasi musical with the filtered cadence of the vibrations of a Tamboor exposed to the high winds - this is the soulful picture of the Maharajah on his legs. It sticks on to the parchment of the brains. and to the plates of the mental photograph; it becomes inerasable for ever.

Humility in aristocrats is rare; and rarer still is its open confession. Yet, when you find an aristocrat parading in this wily robe, you feel it does not fit him. It sits unnaturally over him. You imagine it must be a humility with a hook, a sort of ' stooping to conquer '. But in the excep tional instance of Pithapuram it is entirely different. Words of humility drop trippingly from his tongue. There is a spontaneity in his confession of humility that disarms the suspicions of the deadliest of critics. Though by itself, the Maharajah's is a name which carries weight and dignity on this side of the Vindhyas, yet he is too humble by nature to sail under his own colours.

He must needs invoke the names of greater men and nobler, for whom he has carved out hallowed niches in his heart. His faith in great men is next only to his faith in God. Is it a new venture he embarks upon or is it a public meeting that he begins to address ? You can invariably hear him chant the praise of God and speak of the patronage of the Great. The best among such great men are Paul Brunton and Sir Venkatratnam.

The Maharajah of Pithapuram is a typical Andhra who prides in his race and patronises his literature. He is the modern Krishnadevaraya of magnificent fame. He is drunk with the wine of his literature and revels in the beauty of his language. He rapturously refers to his divine language as the Italian of the East. Opposed to idolatry in religion, I am afraid, he is too much of an idolator in language.

***To Continue....***




பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்

தலைசிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழ்நாடு அரசு




## அகநானூறு — 27

தலைமகட்குத் தோழி சொல்லியது.

**பாலை** **மதுரை கணக்காயனார்**

"கொடு வரி இரும் புலி தயங்க, நெடு வரை
ஆடு கழை இரு வெதிர் கோடைக்கு ஒல்கும்
கானம் கடிய என்னார், நாம் அழ,
நின்றது இல் பொருட் பிணிச் சென்று இவண் தருமார்,
செல்ப" என்ப என்போய்! நல்ல
மடவை மன்ற நீயே; வடவயின்

வேங்கடம் பயந்த வெண் கோட்டு யானை,
மறப் போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்
கொற்கை அம் பெரும் துறை முத்தின் அன்ன
நகைப் பொலிந்து இலங்கும் எயிறு கெழு துவர் வாய்
தகைப்பத் தங்கலர் ஆயினும், இகப்ப
யாங்ஙனம் விடுமோ மற்றே தேம் படத்

தெள் நீர்க்கு ஏற்ற திரள் காற் குவளைப்
பெருந்தகை சிதைத்தும், அமையா, பருந்து பட,
வேத்து அமர்க் கடந்த வென்றி நல் வேல்
குருதியொடு துயல்வந்தன்ன நின்
அரி வேய் உண்கண் அமர்த்த நோக்கே?

## AGANANOORU— 27

Maid Friend Speaks

**PALAI** **MADURAI KANAKKAYANAR**

Whirl of West Wind in Summer time
shakes bamboo grown hill slope.
Feral tigers striped cranky
stray for prey in packs roving!
Plans Our Lord in daring hadte
to venture via the wild terrain.
You tell me after wealth is he
for treasure hunt! Why you pirate
in youth so mad! Pantyas in power
protect Venkatam habitat of ivory
tusker-memory in mighty number!
Korkai big port famed pearl white
smile of thine, and coral lips
hold him not in check! Even after
meeting thy . ..longing red eyes
nenuphar like, fain would he part
with you sure? Anxious are you!

***To Continue...***



# இரண்டு குழந்தைகள்!

முனைவர் தேவி நாச்சியப்பன்

145

குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா குறித்து பாவலர் மணி ஆ.பழனி அவர்கள் 05. 04. 2002 அன்று எழுதிய கட்டுரை.

## நீள நினைந்த போது

குழந்தைக் கவிஞர் அவர்கள் சென்னையில் இருந்து காரைக்குடிக்கு மாற்றலாகி வந்த நேரம். ஒரு நாள் கவிஞர் முடியரசன் அவர்கள், "குழந்தைக் கவிஞரை பார்க்க வேண்டும். ஆதலின் இந்தியன் வங்கிக்குச் செல்வோம். வாருங்கள்." என்று அழைத்தார். எனவே நானும் அவருடன் சென்றேன். அறிமுகங்களும் உபசரிப்புகளுமாகச் சிறிது நேரம் கழிந்தது. பின்னர் குழந்தைக் கவிஞர் கேட்டார் "என்ன வேலையாக வங்கிக்கு வந்தீர்கள்?" பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு கேட்புக் காசோலை (டி.டி) வாங்க வேண்டும் என்றார் கவிஞர். உடனே குழந்தைக் கவிஞர் அதற்கான படிவத்தை நிறைவு செய்து தொகையைத் தருமாறு கேட்டார். கவிஞரும் தொகையைக் கொடுத்தவாறு "கமிஷன் எவ்வளவு?" என்றார். குழந்தை கவிஞர் சிரித்துக் கொண்டே "பெரிய பெரிய பணக்காரர்கள் எல்லாம் மிகப்பெரிய தொகைக்கு கூட கமிஷன் இல்லாமல் கேட்புக் காசோலை கேட்கின்றார்கள். உங்களிடம் நாங்கள் எதற்காகக் கமிஷன் வாங்க வேண்டும்?" என்றார்.

கவிஞர் கூறினார் "அவர்கள் எல்லாம் பெரிய பணக்காரர்கள். பெரும் தொகையை உங்கள் வங்கியில் இட்டு வைப்புச் செய்திருப்பார்கள். அந்த உரிமையில் அவர்களும் கேட்கலாம்;நீங்களும் வழங்கலாம். அவர்களுக்கான விதி எனக்குப் பொருந்துமா?" என்றார். உடனே குழந்தைக் கவிஞர் "செல்வர்களுக்கு இந்தச் சலுகை உண்டென்றால் உங்களுக்கும் இந்தச் சலுகையை நான் வழங்கத்தான் வேண்டும்." என்றார்.

இதை கேட்டதும் கவிஞர் திகைத்துப் போனார். "ஆம். நீங்கள் செல்வந்தர் தாம். மிகப்பெரிய கவிதை செல்வர் இல்லையா? அதனால் தான் 'கமிஷன்' இல்லாமலே கேட்புக் காசோலை வழங்குகிறோம்." என்று குழந்தைக் கவிஞர் சிரித்துக் கொண்டே கூறியபோது, அச்சிரிப்பொலி அங்கிருந்த மற்றவர்களின் சிரிப்பொலியோடு இணைந்து கொண்டது.

இந்த நிகழ்ச்சி நடந்து ஒரு திங்களுக்குப் பின்னர், நானும் கவிஞர் முடியரசன் அவர்களும் காரைக்குடி, பழைய பேருந்து நிலையத்தில் நின்று



கொண்டிருந்தோம்; மதுரை செல்வதற்காக, அப்போது குழந்தைக் கவிஞர் வந்த கார், எங்களைக் கண்டதும் நின்றது. "எங்கே செல்கிறீர்கள்?" என்றார் குழந்தைக் கவிஞர். " மதுரை" என்றோம் நாங்கள். . தானும் மதுரை செல்வதாகக் கூறிய குழந்தைக் கவிஞர், "ஏறுங்கள் வண்டியில்" என்றார்.

கவிஞர் முடியரசன் அவர்கள் பாத்திமா கல்லூரிக் கவியரங்கில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்தார். இதை அறிந்த குழந்தைக் கவிஞர் எங்களைப் பாத்திமா கல்லூரியில் இறக்கிவிட்டு, "இன்னும் மூன்று மணி நேரத்தில் திரும்பி வந்து உங்களை ஊருக்கு அழைத்துச் செல்கிறேன்." என்று கூறிச் சென்றார்.

கவியரங்கம் தொடங்கும் நேரத்தில் கவிஞர் முடியரசனின் உடல்நிலை கேடுற்று விட்டது. "கவியரங்கிற்குத் தலைமை ஏற்று நீ நடத்து". என என்னைப் பணித்துவிட்டு,கவிஞர் ஓய்வாகப் படுத்து விட்டார். அப்பொழுது கல்லூரி மருத்துவர் மூலம் கவிஞருக்குத் தக்க மருத்துவம் செய்வித்தனர்.

இந்நிலையில் அங்கு வந்த குழந்தைக் கவிஞர் மிகவும் மனம் வருந்தி, "ஊருக்கோ, வேறு மருத்துவமனைக்கோ கவிஞர் முடியரசனை அழைத்துச் செல்கிறேன்." என்று வற்புறுத்தினார். ஆனால் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சக்திப் பெருமாள் அவர்கள், "கவிஞருக்கு ஒன்றுமில்லை. சாதாரணக் காய்ச்சல் தான் என்றும் இன்று இரவு ஓய்வெடுத்துக் கொண்டால் போதும் என்றும் மருத்துவர் கூறுகின்றார். ஆதலின் கவிஞரை நான் என் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு செல்கிறேன்." என்று கூறியதும் குழந்தைக் கவிஞரும் "நல்லது" என்று கூறி எல்லாரையும் தன்னுடன் காரில் அழைத்துச் சென்று சக்திப் பெருமாள் வீட்டில் விட்டுத் திரும்பினார். மாலை ஐந்து மணிக்கே காரைக்குடி திரும்பி இருக்க வேண்டிய குழந்தைக் கவிஞர், இரவு 10 மணிக்குத் தான் திரும்ப முடிந்தது.

குழந்தைக் கவிஞரின் ஆழமான நட்புணர்ச்சியும் "புன் கணீர் பூசல் தரும்." என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ற வாழ்க்கையாக வாழ்ந்ததும் என்றும் என் மனத்தில் பசுமரத்தாணி போல் இருக்கும்.

நீள நினைக்கத் தக்க நாற்றங்கால் கவி.



# பதிகங்களைப் படியுங்கள்!

154

செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

## ஒன்பதாம் திருமுறை

சேதிராயர் அவர்கள் சேதி நாட்டில் பிறந்தவர். சேதி நாடு என்பது தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்கில் உள்ள பகுதி. இவரின் பாடல்களில் இறைவனின் திருநடனத்தின் போது திருவிளையாடல்களின் போது மனம் கவர்ந்த மாதிரி தாங்கள் ஏற்று மகிழ்வித்தல் செய்தால் அன்றி நற் குறவால் மணமகிழமாட்டாள், இவள் ஒன்றும் ஆகினாள் உன் பொருட்டு எனத் தனித்துவம் மிக்க பாடல்களைப் பாடியுள்ளார். தில்லை நாயனாரைப் பாடிய தன் பாடல்களைப் பாடி ஆடி இன்பம் எய்திருப்பாரே எனக் கூறி பஞ்சமப்பண்ணில் சேதுலாம் என தொடங்கும் பதிகங்களைப் பதிவு செய்துள்ளார். சேதிராயர் என்ற பெயர் சிறிது வித்தியாசமாக இருப்பதை உணரலாம். கிருஷ்ணதேவராயர் தென்னகத்தில் தன் படைகள் மூலம் சுல்தான்களின் ஆக்கிரமிப்பிற்குப் பின் அரசு செயல்படுத்திய பிறகு தான் ராயர் என்ற பெயர் பரவலாக வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது மதுரைநாயக்கர் ஆட்சியின் தொடக்கத்திற்கு முன்பு பாண்டிய நாட்டின் வடபகுதியில் விஜயநகரப் பேரரசுக்குத் தனிப் படை நடத்திய மாராதி ராயர்கள் மதுரை நாயக்க மன்னருக்கு கீழ் பாளையக்காரர்களாக விளங்கிய வனாதிராயர்கள் கிபி 11ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் பரவலாக இருந்து வந்துள்ளனர். தமிழ்நாட்டில் மறவர் முத்தரையர் முனையத் தரையர் வனாதிராயர் காளிங்கராயர் எனப் பலவேறு பெயர்களைக் கொண்டு ஆற்றல்மிகு குழுக்களாகச் சிறப்புற்று விளங்கியுள்ளனர். சேதிராயர் என்ற பெயரும் இத்தகைய குழுத் தலைவரில் வருவதாக இருந்திருக்கலாம். ஆனால், வானதி ராயர்கள் மாவலிச் சக்கரவர்த்தியின் வழியால் வந்தவர்கள் என கூறிக்கொண்டு வாணர் என்றும் பாணர் என்றும் மாறி அழைக்கப்பட்டிருந்தனர். எல்லோருக்கும் வளைந்து கொடுத்து நீண்ட காலம் ராயர் வம்சாவளியினர் இருந்திருக்கின்றனர். சோழர் காலத்தில் வடக்கே குண்டூர் கிருஷ்ணா முதலான மாவட்டங்களில் தனித்தும் ஆட்சி நடத்தியுள்ளார்கள். சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியில் மகதேசம் என்ற பெயரிலும் தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்கேயும் தனித்து ஆட்சி புரிந்து வாழ்ந்திருந்தனர். நிலக்கோட்டை வட்டத்து, தென்கரை சிவன் கோயில் அதிட்டானத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று பாண்டியனின் அரசு அதிகாரியாக ஒரு மகாராயர் இருந்ததை குறிப்பிட்டுள்ளது எனத் தெரிகிறது. மதுரை அழகர் கோயில் கல்வெட்டு ஒன்றில் வீர வேங்கட தேவ மகாராயர் குறிப்பிடப்பட்டுள்ளார். மாணிக்கவாசகப் பெருமானின் ஆவுடையார் கோயிலில் உள்ள திருப்பெருந்துறை சிவனை வானதி ராயர் ஒருவர் வழிபட்டுத் தானமும் அளித்ததை மயிலாடுதுறை செப்பேடு தெரிவிக்கிறது இவ்வாறு ராயர் குளத்தில் பிறந்தோர் வைணவத்திற்கும் சைவத்திற்கும் கிபி 11 12 ஆம் நூற்றாண்டுகளில் சேவை புரிந்து வந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இச்செய்தி ராயரின் ஒன்பதாம் திருமுறையில் அமைந்துள்ள பாடல்களும் மிகவும் அழகிய தமிழில் பண்சுமந்த பாடல்களாக விளங்குகின்றன. சேதுராம் வயல் எனத் தொடங்கி அந்தாதிகளாகப் பத்து பாடல்கள் இயற்றியுள்ளார். அதன் இறுதிப் பாடல் மட்டும் தனித்து ஏறுமாறு எழில் சேதிகோன் தில்லை நாயனாரை நயந்து உரை செய்தன தூயவாறு உரைப்பார் உறக்கத்து இடையாய் இன்பம் ஈந்து இருப்பரே எனச் சொல்லி முடிக்கிறார். அரவனே அன்று பன்றிப்பின் ஏகிய மறவனே எனை வாதை செய் எனும் இறைவன் சிறை வந்தார் பொழில் தில்லையளி எனும் பிரேகுளம் முதற்பை வலையே பிறை போன்ற நெற்றி கொண்ட வலைக்கரம் அணிந்த மங்கையே நீ உள்ளத்தில் உவந்து ஏற்றிப் பரவசம் அடையும் இறைவன் அறவாழி அந்தணன் எனத் தொடங்கி, திருவிளையாடல் புராணத்தில் வரும் ஒரு கதையை எடுத்துரைக்கிறார். தாய் பன்றி ஒன்று குட்டிகள் ஈன்று மடிந்து விட்டதும் அதன் சேய்கள் பாலின்றி வருந்துவதைக் கண்ட மாரவர் கோன் இறைவன் இறங்கி பூமிக்கு வந்து பன்றியாகிக் குட்டிகளை காத்தருளிய புராணத்தைச் சுட்டிக்காட்டி வீரமானவனே என்னை துன்புறுத்தாமல் ஏற்றுக் கொள்வாயாக வல்லமைக்கு மலர்கள் சூழ்ந்து செல்லையும் தில்லையில் உள்ள திருவே உன்னைக் கால் பணி செய்கிறோம். என சேதி ராயர் பாடலுடன் ஒன்பதாம் திருமுறை முடிகிறது

வளரும் . . . . .



பெரும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார்

கனடா

இந்தியாவில் இந்தி பேசுவோர் 25% ஐ – தாண்டமாட்டார்கள். இந்திமயமாக்கல் இந்தித்திணிப்பு, மற்ற மொழிகளை இரண்டாந்தர மூன்றாந்தர அல்லது அடிமை மொழிகளாக ஆக்கும் திட்டங்களை அறிவது கடன்.


பள்ளிகளில் தாய்மொழியைச் சொல்லித்தராமல் இருப்பது தாய்மொழியழிப்பு முறை. இதனை தமிழகத்திலே செய்து வருகின்றார்கள். தமிழ்ப்பெற்றோர்கள் அறியாது இந்தக் கெட்டசூழ்ச்சிக்குத் துணைபோகின்றார்கள் ..... இந்தியாவில் உத்திரப்பிரதேசத்தில் வழங்கும் ஏழு மொழிகள். இவற்றை இந்தி எனத் தவறுதலாக வழங்குகின்றனர்.... அவாதி மொழியில் நோயாளிகள் பேச தில்லியிலுள்ள இந்தி மொழியறிந்த மருத்துவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

தமிழுக்கும் கன்னடத்துக்கும் நெருங்கிய தொடர்பிருந்தாலும், அவை வெவ்வேறு மொழிகள். அப்படிப்பட்டதே இவை. பெரும் ஏமாற்றாக இவை இந்தியின் வட்டாரவழக்குதான் தொடர்ந்து பொய்யுரைத்து வருகின்றனர். இந்த நாடகம் உத்திரப்பிரதேவத்தில் மட்டுமன்று, இராச்சசுத்தான் பீகார் என்று வடக்கே நெடுக நடக்கின்றது.

இப்பெயரின் சரியான ஒலிப்பு ஆம்பே$^{3}$ட$^{3}$கர. இதனைச் சிலமுறை விளக்கியும் சொல்லியுள்ளேன். பிறைக்குறிகளுக்குள் அம்பேத்கர் என்றும் எழுதியிருக்கின்றேன்.

இராச்சசுத்தான் அல்லது இராசத்தான் என்பது தமிழில் வழங்கப் போதுமானது. கிரந்த எழுத்துகளைச் சேர்ப்பதால் 66 எழுத்துகளுக்கும் கூடுதலாகக் கற்கவேண்டும். இது மிகப்பெரும் சுமை. தமிழின் இலக்கண மரபுகள் கெடுகின்றன, தமிழின் ஒலிநயம் கெடுகின்றது.

இடாய்ச்சு, எசுப்பானியம், பிரான்சியம் போன்ற மொழிகளிலும் திரித்தே எழுதுவர் வழங்குவர். என் பெயரை இந்தியிலும் திரித்துத்தான் எழுதமுடியும், சென்னை நகரத்தின் பெயரும் அப்படித்தான். மொழிக்கு மொழி மாறுபட்ட ஒலிப்புகள் இயல்பே.







மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

அவ்வுலக நூல் தமிழ் மொழியில் எழுதப்பெற்றதாதலின். ஞாலமக்களின் தொகை இருநூற்று நாற்பது கோடியென உலக நாட்டவை கணக்கிடும். அடுக்கிய கோடி கோடி மக்கள், மக்கட் பிறப்பு என்றளவில் ஒரு நிலையினரேயன்றி, வாழ்வில் மற்றுப் பல் வகையானும் எண்ணத் தொலையா வேற்று நிலைப்பட்டவர். பொருள் வரும் வழிகளை ஆக்கிக்கோடல், ஈட்டல், காத்தல், துய்த்தல், ஈதல், இவறல் என்றின்னோரன்ன பொருள் நிலைகளாலும்; கற்கும் நோக்கம். நூல், ஆர்வம், முறை, கொள் வன்மை, சுவை, நுண்மை, ஆழம், அகலம் என்றின்னோரன்ன கல்வி நிலைகளாலும்; இயற்கை யறிவு. நூலறிவு. நுண்ணறிவு.

புரட்சியறிவு, தொழிலறிவு. ஆக்கவறிவு. பழக்கவறிவு, தன்னறிவு அறிவு நிலைகளாலும் என்றின்னோரன்ன

ஒருத்தர்போல் ஒருத்தரிலர். பொருள் கல்வி அறிவுண்மைகள் ஒருபாற் கிடக்க, பொருளின்மை கல்வியின்மை அறிவின்மை என்ற இன்மை நிலைகளிலுந்தாம் நம்முள் வேறுபாடு கணிக்கத் தரமோ

இனைய நிலைப்பன்மை வேறுபாடெல்லாம் நுணுகித் தெளிந்த ஓராசிரியர் வள்ளுவர். அவர் தெளிவுக்கு நம் கைக்குறளே கரி.

அழுக்காற்றினனும் பண்பிலானும் கல்லாதவனும் பேதையும் பெருஞ்செல்வர்களாக, அழுக்காற்றிலாரும் கற்றாரும் இற்பிறந் தாரும் நற்பொருள் சொல்வாரும் வறியவராகக் கண்டார். தமர் பசிக்க ஏதிலார் ஆர்த்தும் பேதைமையும், எச்சிற்கை உதறாக் கயமையும், ஒருவரால் நச்சப்படாவசையும்; ஈயாது இவறும் மருளும், செயற்பால செய்யா வெறுமையும் பற்றிய செல்வர் பலராக, ஊர்நடுப் பழமரமாய், நீர் நிறை ஊருணியாய், மருத்து மரமாய், கைம்மாறு வேண்டா மாரியாய் வழங்கும் ஒப்புரவுச் செல்வர் சிலராகக் கண்டார்.

ஒன்றெய்தி நூறு இழப்பிக்கும் சூதிற்கும், மெய்யறியாமை விளைக்கும் கள்ளிற்கும், மாய முயக்குத் தரும் இருமனப் பெண்டுக்கும் படூஉம் செல்வச் செலவு ஒருபாலாக, பல குடும்பத்து ஈன்றாள் பசிதீர்க்க மாட்டா வறுமைப் பிணியை மறுபால் கண்டார். உண்ண இலன் என்று வெஃகுவாரையும். தீய செய்வாரையும், வாளா மடிவாரையும் ஒருபாற் கண்ட வள்ளுவர், நன்றே தரினும் அல்வழிச் செல்வம் வேண்டாம், உழைப்பே ஊதியம், ஊக்கமே உடைமை என்னும் உயரிய கொள்கைச் செல்வரையும். அவர் வழி வினவி ஆக்கம் செல்லலையும் கண்டார்.

அன்பும் அறமும் பசியும் துறந்து ஈட்டுவாரும். வஞ்சகத்தால் பொருள் செய்து மகிழ்வாரும். எளியோர் அழப் பறிப்பாரும். பழிமலைந்து ஆக்கம் பெறுவாரும். இகழ்வார் பின் நின்று மானம் இழப்பாரும், பிறர் செல்வம் வெஃகித் தம்முடைமை விடுவாரும், இரந்தே வாழப் பயில்வாரும். சிறுபொருள் வருவது போலினும் முந்துற்றுத் தம்மையே விற்பாரும் ஆக, உலகம் பொருள்வகையான் பல நிலையாளரைக் கொண்டது.

*வளரும் . . . . .*



# தமிழன்னை நான்மணிமாலை

*செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு*

சங்க இலக்கிய ஆய்வறிஞர்

47

**விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடமும் பொறாமை கொள்ளாத பெருந்தன்மை பெற்றுவிட்டால் அதற்கு ஈடாகக் கிடைக்கக்கூடிய சிறந்த பேறு வேறில்லை என்பது திருவள்ளுவர் காட்டிய நல்வழி. எப்பொழுதும் செல்கிறேன் அவரது சொல்வழி! பிறரது திறமையை அல்லது உயர்வைக் கண்டு குமுறும் மனம் கொணரும் பெரும் வீழ்ச்சி! அழுக்காறு கொணரும் இதுவரை வாழ்வில் காணாத தாழ்ச்சி! இது தமிழன்னை வள்ளுவர் வாயிலாகக் கற்றுத் தந்த வாழ்க்கைக்கல்வி! நானும் கசடறக் கற்றுத் தெளிந்தேன் வாழும் செவ்வி! பொறாமையற்ற மனத்தை அடைவது எளிதல்ல. அடைந்துவிடில் பேரின்பம் அடைவது அரிதல்ல. அணுகி வரும் எவரையும் அன்புள்ளத்தில் ஏந்தும் பண்பு தந்த அன்னைக்கு நாளும் இன்பமாய் நான் தொடுத்துச் செல்கிறேன் நான்மணிமாலை!

## அகவல்

உலகில் கற்றே ஓங்கிட அன்னை
நலமாய்த் திகழும் நல்வழி உணர்த்தினள்
ஓரம் போகியின் ஒளிரும் மருத
ஈரம் என்னுள் ஈன்றவோர் இன்பம்
வேட்கைப் பத்தும் வேழப் பத்தும்
கள்வன் பத்தும் புலவிப்பத்தும்
தோழிக் குரைத்ததும் கிழத்தி கூற்றும்
தோழி கூற்றும் எருமைப் பத்துடன்
நினைவில் இனித்து நீங்கா திருக்கும்
புனலாட்டுப் பத்தும் புலவி விராய
பத்தும் சேரப் பத்துப் பத்து
வித்தக மாக விளைத்தனன் புலவன்
ஒன்றனை விளித்தலும் ஒருவரை விளித்தலும்
என்றே பாக்கள் இயல்பாய்ச் சென்றிடும்
நாடகப் புனைவில் நகர்ந்திடும் பாக்கள்
ஈடெதும் இல்லா திலங்கிடும் வனப்பில்
களனும் அதனில் காட்சியும் கொண்டே
உளமும் மகிழ உள்ளுறை இறைச்சி
மறவா இனிமை மலைந்த
இறவாப் புகழுடை இலக்கியச் செழிப்பே!

## 51

## வெண்பா

செழிப்பு குறையாச் சிறப்புடன் அன்னை
அழியாக் குவையை அளித்தாள்–மொழியினில்
மேம்படச் செய்தவள் மேன்மையும் தந்தெனை
ஓம்பினள் நெஞ்சம் உவந்து.

## கலித்துறை

உவந்தே எதிலும் உழைத்தே மொழியில்
உரமடைந்தே
அவத்தை உதிர்த்தே அகத்தில் செழித்தேன்
அதையறிந்தே
தவத்தால் எதையும் தனித்தே அடையும்
தகைமையுடன்
இவன்தான் எழுவான் எனவே கணித்தாள்
இறைமகளே!

## விருத்தம்

இறைவி அருளும் இலக்கியத் தேரில்
இயன்றே பறந்தேன் இசைக்கடலாய்
உறையும் எழிலாள் உருவம் தொழுதே
உயிருள் வலிமை உடையவனாய்த்
துறைகள் எதிலும் துடிப்பாய் வென்றே
தொடர்ந்தேன் அன்னை துணையுடனே
நிறையை அளித்தாள் நினைவில் கமழும்
நிலையும் கொடுத்தாள் நெகிழ்வுடனே!



புறநானூறு புகலும் விளக்கம்!

புலவர் தி.வே. விஜயலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்.,

34

## வறுமையில் செம்மை:

கடுமையான வறுமைச் சூழலில் வாடி வருந்தினும், பெருஞ்சித்திரனார் தன்மானத்தை மதிப்பை ஒரு போதும், ஒரு சிறிதும் இழக்க உடன் பட்டதில்லை. இது அவரது ஆளுமையில் சுடர் விட்டு நின்ற ஒரு தனிப்பெரும் பண்பாகும்.

பெருஞ்சித்திரனார் ஒருமுறை அரசன் வெளிமானைக் காணச் சென்றபோது, அவன் உறங்கப் போய் விடுகிறான். போவதற்கு முன் புலவர்க்குப் பரிசல் கொடு எனத் தன் தம்பியிடம் சொல்லி விட்டுச் செல்கிறான். தம்பி இளவெளி மானோ புலவர் தகுதியறியாது சிறிது பரிசில் கொடுத்தான். அதனை ஏற்றுக் கொள்ளாமல் புலவர் குமணனிடம் செல்கிறார். குமணன் யானைப் பரிசில் தருகிறான். அதனை வெளி மானின் ஊர்க் காவல் மரத்தில் கட்டிப்போட்டுவிட்டு பெருஞ்சித்திரனார் பாடிய புறப்பாடல் அவர் கொண்ட வறுமையிற் செம்மையைக் காலமெல்லாம் காட்டிக் கொண்டிருக்கும் அரிய பாடல் ஆகும்.


"இரவலர்க்கு ஈந்து காப்பவன் நீ ஒருவனே அல்லன்; இரவலரைக் காப்பவர் இல்லாமல் போனாரும் இல்லை. என்னைப் போன்ற இரவலர் இருப்பதையும், அந்த இரவலர்க்கு ஈவோர் இருப்பதையும் போய்ப் பார்க்கவும். புரவலன் ஒருவன் தந்த யானைப் பரிசை உன் ஊர்க் காவல் மரத்தில் கட்டிவைத்து விட்டு வந்துள்ளேன். இனிப் பெருமிதத்துடன் செல்கிறேன்" என்று பாடிய பெருஞ்சித்திரனாரின் பெருமித மொழியினைத் தன்னகத்தே கொண்ட பாடல் வருமாறு:–

"இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண், இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண், இனி நின் ஊர்க்
கடிமரம் வருந்தத்தந்து யாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்
கடுமான் தோன்றல்! செல்வல் யானே" (புறம் 162)

என்கிறது புறப்பாடல்.

காவல் மரத்தைத் தெய்வமெனப் போற்றிக் காப்பது மன்னர் இயல்பு. பெருஞ்சித்திரனார் காவல் மரத்திலே யானையைக் கட்டியதே அவனைப் பேரிழிவு செய்வதாகும். இங்ஙனம் திண்ணிய துணிவு மிக்க தமது சொல், செயல் ஆகிய இரண்டாலும் தகுதியறியாமல் தரம் தாழ்ந்து ஒழுகிய இள வெளிமானுக்குத் தகுந்த பாடம் கற்பித்துள்ளார் பெருஞ்சித்திரனார்.

இவ்வாறு சங்ககாலப் புலவர்கள் வறுமையிற் செம்மையாய், ஆளுமைப் பண்பின் மணிமகுடமாக வாழ்ந்தமையைப் புறநானூறு இனிதே பகிர்கிறது. பெருஞ்சித்திரனாரை யொத்த புலவர்கள் சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவர் என்பற சான்றோர்.





மருத்துவமாமணி தாரா நடராசன்

# Children Learn What They Live

IF A CHILD LIVES WITH CRITICISM, HE LEARNS TO CONDEMN.

IF A CHILD LIVES WITH HOSTILITY, HE LEARNS TO FIGHT

IF A CHILD LIVES WITH RIDICULE, HE LEARNS TO BE SHY.

IF A CHILD LIVES WITH SHAME, HE LEARNS TO FEEL GUILTY.

IF A CHILD LIVES WITH TOLERANCE, HE LEARNS TO BE PATIENT.

IF A CHILD LIVES WITH ENCOURAGEMENT HE LEARNS CONFIDENCE.

IF A CHILD LIVES WITH PRAISE, HE LEARNS TO APPRECIATE

IF A CHILD LIVES WITH FAIRNNESS, HE LEARNS JUSTICE.

IF A CHILD LIVES WITH SECURITY, HE LEARNS TO HAVE FAITH.

IF A CHILD LIVES WITH APPROVAL, HE LEARNS TO LIKE HIMSELF

IF A CHILD LIVES WITH ACCEPTANCE AND FRIENDSHIP,
HE LEARNS TO FIND LOVE IN THE WORLD.







திரு. இரா. குமரவேலன்



While narrating the birth of the second son of Dasarata, Viswamitra says,

தள்ளரிய பெரு நீதித் தனியாறு புக மண்டும்
பள்ளமெறும் தகையானைப் பரத முனனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக் கேகயர்கோன் மகன்பயந்தான

Here Bharata is compared with Rams for his beauty and great qualities. From here onwards we see the principle of paraelism working throughout the epic.



In all virtuous qualities Bharata followed Rama closely and in situations when his section tested he acted like his elder brother, Rams would have played the part just like the same, if he had been given the role of Bharata.

Se see two renunciations of the Ayodhya kingdom in the Epic. The first by Rama who was asked to get himself crowned by his father Dasarata, and the second by Bharata who was asked to get crowned by his mother Kaikeyi. Rama renounced the

kingdom to keep the promise of Dasarata given to Kaikeyi and also to follow the path of Truth and Dharma.

While every body was puzzled about the erowing, Rama simplified the problem by nobly renouncing his right. He was hailed as a follower of Dharma by one and all. " This renunciation was watched by the equally wonderful renunciation by Bharata ". Bharata threw the kingdom, which came to him unasked through his mother, pointing out that besides his own conviction, the people would not consider him as the rightful successor to the throne and that they would curse him for the act of getting himself crowned. He did not therefore pay heed even to the words of the sages and stood firm on the ground in his decision of not accepting the crown. Thus Bharata not only renounced the kingdom of Ayodhya but also resolved to bring back Rama and crown him as the king. By these two renunciations, it would be clear that both Rana and Bharata are characters of the same type and qualities. Such a kind of parallelism between the characters exists through- out the epic. In keeping the promise of Dasarata in following the path of Dharma, in working for the peace of the country, in fighting for the right cause against the demons both Bharata and Rama develop the plot of the epic on parallel lines.

" It provides the real bond of connection between the parts of the play and secures a kind of moral writing ".

The principle of contrast is another trait of an epic poet to develop the plot and characters of his work. The contrast between the two characters of Bharata and Lakshmana are numerous.

Both of them strictly follow the path of Dharma and have the utmost affection and devotion towards Rama.But their devotion to their elder brother Rama differ. Lakshmana acted with this end in view throughout and he never worried about other people's remarks. His only aim was to serve Rama and he would do that even if it displeases Rama. But Bharata would pay epecial attention to the words of Reme and whenever possible he would obey his brother and try always This is one of the to act as Rama wished or would wish. minute differences in the two characters contrast exists in the whole work.This type of Kamban has skilfully made use of these differing qualities of the two brothers in his epic writing.

*To Continue...*



# பூமழை



19. 04. 2023 அன்று மலர்ந்த உலகத்தமிழ் மின்னிதழ் படித்தேன்... சிறப்பான முகப்பு படங்களோடு இதழ் அருமையாக இருப்பது மகிழ்ச்சியே.

இந்த வார இதழின் கொள்கை விளக்கக் குறிப்பு– தமிழ் வளர்ச்சி 53– வது வாரத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னை குறித்து பதிவு செய்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. 2004 –ஆம் ஆண்டில் தமிழ் மொழி செம்மொழி என அறிவிக்கப்பட்ட பின்னர், பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் எல்லாக் கூறுகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு இந்நிறுவனம் தொடங்கப்பட்டிருப்பதை படித்துத் தெரிந்து கொண்டேன்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மத்திய கல்வி அமைச்சகத்தின் மொழி பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் இந்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனமாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராக இருப்பதும் சிறப்பு கூடுதல்தான்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இன்னும் நாம் அறிந்திராத செயல்பாடுகள், சாதனைகள் என வருகின்ற வாரங்களில் ஆசிரியர் தொடர்ந்து பதிவு செய்வார் என எதிர்பார்க்கிறேன்.

நூலேணி, தமிழெழுச்சி, தேன்துளி ஆகிய பகுதிகளெல்லாம் சிறப்பான இடத்தை வாரந்தோறும் தருகிறது என்றால் அது மிகை அல்ல...

தமிழெழுச்சிப் பகுதியில் மகாகவி பாரதியினுடைய வரிகளும் ,பாவேந்தர் பாரதிதாசன் வரிகளும் தொடர்ந்து வெளியிடுவது நம்மை மகிழ்ச்சிப்படுத்துகிறது. வருகின்ற வாரம் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாள் சிறப்பு இதழாக வெளிவந்தால் மகிழ்ச்சியாக இருக்கும்.

தேன்துளி பகுதியில் இரண்டு துளிகளும் தித்திக்கும் செய்தியைத் தருகிறது.

வள்ளுவம் என்பது மனுவுக்கு நேர் எதிரானது என்பதை மனோன்மணியம் சுந்தரனாரின் வரிகளில் இருந்து எடுத்துக்காட்டியிருப்பது அருமை .

ஒழுங்கான மனிதர்களைக் கொண்ட நாட்டில் இருக்கக் கூடாத ஆறு மைகளை தேன்துளி இரண்டாம் பகுதி சுட்டிக்காட்டி இருப்பது மிக மிக சிறப்பாக இருக்கிறது.

இதழின் அடுத்த பகுதிக்கு நாம் செல்வோம்...

ஆசிரியம் பகுதியில் மாதொருபாகம் தந்த பெருமாள் முருகன் எனும் மாபெரும் எழுச்சி, எழுத்து வேந்தரின் பூக்குழி நாவல் புக்கர் விருது பட்டியலில் இடம் பெற்றிருப்பது தமிழர்களுக்கு மகிழ்ச்சிதானே.

இலக்கியத்திற்காக உலக அளவில் வழங்கப்படும் உயர்ந்த விருதான் புக்கர் விருது என்பது நமக்குத் தெரியும். அந்த விருது பெறுகின்றவர் பட்டியலில் தமிழர் ஒருவரின் பெயர் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஆசிரியம் பகுதியின் ஆரம்பத்தில் புக்கர் விருது என்பதை புத்தர் விருது என பிழையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்த பகுதியாக அவ்வப்போது பகுதியில் மூத்த தமிழறிஞர் ஔவை நடராசனார் பற்றி ஆசிரியர் சிலாகித்து எழுதியிருப்பதை பார்க்கலாம்.

ஐயா ஔவை நடராஜன் அவர்கள் பிறந்த நாள் ஏப்ரல் 24 அன்றாகும்.

அன்று சென்னை மாநிலக் கல்லூரியில் அவரின் படத்திறப்பு, நினைவேந்தல் மற்றும் பிறந்தநாள் விழாவினை சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் எடுத்து நடத்தியதை நாம் அறிவோம்.

ஐயா ஔவை நடராசன் அவர்களின் சிறப்புகளைச் சொல்லி மாளாது .

ஆயினும் ஆசிரியர் அவர்கள் தனது தந்தையாரின் சிறப்புகளைச் சுருக்கமாக சொல்லியிருக்கிறார் .

கவியரசர் பொன்னி வளவனின் கவிதையை அவருக்கே நினைவு படுத்தும் ஐயா ஔவை நடராசனின் நினைவாற்றல் என்பது என் நம்மையும் சிலிர்க்க வைக்கிறது.

தமிழ் வளர்ச்சி, கலை பண்பாட்டுத் துறையின் அரசு செயலாளராக அவர் ஆற்றிய மணிகளை நாம் வியந்து போற்றுகிறோம்....

புதிய புதிய கலைச்சொற்களை நிர்வாகத்தில் புகுத்தியிருக்கும் ஐயா அவர்களின் பணிகளை வியந்து போற்றுகிறோம்...

ஆங்கிலச் சொற்களை உடனுக்குடன் சரியாக மொழிபெயர்த்துத் தந்திருக்கும் ஆற்றலை நாம் எண்ணி வியந்து போற்றுகிறோம்...

அவரது காலத்தில் ஆட்சிண் தமிழை நிர்வாகத்தில் தீவிரமாக நடைமுறைப்படுத்திய பாங்கினையும் எண்ணி நாம் பெருமைப்படுகிறோம்...

பல்வேறு சிறப்புத் திட்டங்களை புகுத்தி இருக்கும் அவரது போக்குகளையும் நாம் உயர்ந்து பார்க்க தவறக் கூடாதல்லவா?

தொடர்ச்சி அடுத்த பக்கம்







ஆசிரியர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது போல அருங்காட்சியகத்தில் மாதம் ஒருமுறை நடத்தப்பட்ட பண்பாட்டுப் பலகணி என்ற நிகழ்ச்சியும், வள்ளுவர் கோட்டத்தில் வாரந்தோறும் நடைபெற்ற திருக்குறள் வகுப்பு நிகழ்ச்சியும் ஐயா அவர்கள் அறிமுகப்படுத்திய நிகழ்ச்சிகள் என நாம் படிக்கையில் பேருவகை அடைகிறோம்.

அவ்வப்போது பகுதியில் நிறைவாக ஆசிரியர் இப்படிச் சொல்கிறார்...

"சிந்திப்பது, சிரிப்பது என்ற இயல்புகள் இருப்பதால்தான் நாளும் வாழ்வில் நாம் உயர்ந்து வருகிறோம். சிரிப்புக்கும், சிந்தனைக்கும் அடிப்படையாக இருப்பது மனம் தான். மனம் தான் மனிதன்... மனம் உடையவனே மனிதன் என்று சொல்லுவது மரபு"

இப்படி நிறைவாக சொல்லியிருக்கும் வார்த்தைகள் மிக சிறப்பான வார்த்தைகளாக நான் பார்க்கிறேன்.

ஐயா ஔவை நடராசன் அவர்களுக்கு பொருந்துகின்ற... பொருத்தமான வார்த்தைகள் இவைகள்.

ஔவை நடராசன் அவர்கள் பல்வேறு தமிழ் வளர்ச்சித் திட்டங்களை செய்தவர்...

சங்கத் தமிழ் புலவர்களுக்கு நினைவுத்தூண் அமைத்தவர்... ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தில் இன்றைக்கு தென்காசி மாவட்டமாக பிரிந்திருக்கும் தென்காசி மாவட்டம் சங்கரன்கோயில் அருகே உள்ள மாங்குடி என்ற கிராமத்தில் சங்கப் புலவனார் மாங்குடி மருதனார் அவர்களின் நினைவுச் சின்னத்தை உருவாக்கியவர் ஐயா ஔவைவை நடராசன் அவர்கள்.

நாங்கள் திருநெல்வேலி பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக ஆண்டுதோறும் ஏப்ரல் 29 அன்று திருநெல்வேலியில் இருந்து ஏறக்குறைய 70 கிலோ மீட்டர் தொலைவிற்கும் அப்பால் இருக்கின்ற அந்த மாங்குடி கிராமத்திற்குச் சென்று மாங்குடி மருதனார் நினைவுத்தூணுக்கு மரியாதை செலுத்தி வருகிறோம்.

சங்கப் புலவருக்கு மரியாதை செலுத்தும் அதே நாளில் ஐயா ஔவை நடராசன் அவர்களின் இந்த அருமையான முயற்சிகளையும் ஆண்டுதோறும் நாங்கள் நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம்.

அவ்வப்போது பகுதியில் ஆசிரியர் அவர்கள் ஐயா ஔவை நடராசன் அவர்களைப் பற்றி சிறப்பாக எழுதியிருப்பது பொருத்தமான ஒன்றுதான்.

நாம் அதனைக் கடந்து வந்தோம் என்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை உரையினை தொடர்ந்து பார்க்கிறோம்...

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரையில் பல்வேறு சிறப்பான அம்சங்களை பார்த்துப் பெருமைப்படுகிறோம்.

அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது "தமிழின் பெருமை என்பது அதன் தொன்மையில் மட்டும் கிடையாது, தமிழின் பெருமை என்பது ஈராயிரம் ஆண்டுகளாக இருக்கக்கூடிய அதன் தொடர்ச்சியில் தான் இருக்கிறது" என்று குறிப்பிட்டுச் சொல்லி இருப்பதை நான் சிறப்பான வரிகளாக பார்க்கிறேன்.

இன்னும் அமைச்சர் அவர்களின் பேச்சில் ஒரு மொழியில் 2000 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சொல் தொடர்ச்சியாக புழக்கத்தில் இருக்க முடியாது. ஆனால் இன்றைக்கும் தமிழ் மொழியில்தான் சொற்கள் தொடர்ந்து தொடர்ச்சியாக இருந்து வருவதை எடுத்துக்காட்டுகளோடு குறிப்பிட்டிருப்பது மிகச் சிறப்பு. அமைச்சர் அவர்களுடைய பேச்சில் தமிழ் வளர்ச்சிக்கான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஈடுபாட்டினை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

தொடர்ந்து ஒவ்வொரு கட்டுரையாக வாசித்து பெருமைப்படுகிறோம். அந்த வகையில் இந்த வாரம் நான் வாசித்து பெருமை அடையக் கூடிய அம்சங்கள் பல இருந்தாலும் புலவர் தி.வே. விஜயலட்சுமி அவர்களின் எழுத்தோவியத்தில் இந்த வரிகளை சொல்லி நிறைவு செய்கிறேன்...

"கடுமையான வறுமைச் சூழலில் வாடி வருந்தினும் பெருஞ்சித்தரனார் தன் மானத்தை மதிப்பை ஒருபோதும் ஒரு சிறிதும் இழக்க உடன் பட்டதில்லை. இது அவரது ஆளுமையில் சுடர் விட்டு நின்ற ஒரு தனிப்பெரும் பண்பாகும்".

வழக்கம் போலவே நிறைவு பகுதிகளான அறிவரசன் மொழியாக்கத் துணை அகராதி மற்றும் இருமொழித் தோரணம் ஆகியன சிறப்புச் செய்கின்றன.

ஐயா ஔவை நடராசன் அவர்களுக்கு அவ்வப்போது பகுதியில் ஆசிரியர் சிறப்பு செய்திருப்பதோடு நிறைவாக புகழ் வணக்கம் பகுதியில் ஐயா அவர்களை நினைவு கூர்ந்திருப்பதும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய பகுதிகள் தான்.

நன்றி...

கவிஞர் பேரா. திருநெல்வேலி.






முனைவர் வி.அன்புமணி
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
இந்தி மற்றும் இதர மொழிகள் துறை,
கொங்கு கலை அறிவியல் கல்லூரி ( தன்னாட்சி), ஈரோடு.

பகுதி 55

107

மைதிலி சரண் குப்தரின் பஞ்சவடி

(குறுங்காவியம்)



## 109

நீ காண்பது நானன்று
என் மாயத் தோற்றமே.
மெய்யாக இது என் மெய்யன்று;
உரைப்பது பொய்யன்று.
அசல் சொரூபம்
தெரிந்தால் மயங்கிடுவீர்!
கண்டு நடுங்கிடுவீர்!
கண்ணுறும் போதே
கணப் பொழுதில்
காட்சி மாறியது ஆங்கே
அழகிய உரு கொண்டது
இராட்சத உருவந்தனை.



## 110

தென்றலின் தீண்டலை
அனுபவித்த மூவரும்
வன்காற்றின் வீச்சை
எதிர்கொள்ள நேர்ந்தது.
அந்திநேரம் சடுதியில் முடிந்து
காரிருளில் மூழ்கியதோ?!
காலச் சட்டகத்தில் அகப்பட்டு
காலை அலர்ந்த மலர் கூட
மாலை தான் வாடும் – இங்கோ
இமைப்பொழுதில் எழில் முகம்
கோரமாகிய விந்தைதனை
நேரில் கண்ட சாட்சியாய்
உள்ளம் கலங்கினர்.



வளரும்........



## "ஒரு சர்வாதிகாரியின் மறுபக்கம்"

*சிந்தனைச் செம்மல் செங்கோட்டை சனார்த்தனன்*

69

"சர் சி.பி. ராமசாமி ஐயர்"

(மூலக்கட்டுரை டாக்டர் சி.கே. என். நாயர் எழுத்து தமிழாக்கம் செங்கோட்டை ஜனார்த்தனன்)

### கடல் கடந்து ஒரு சந்திப்பு :




நான் அமெரிக்கா சென்ற பின் இரண்டாண்டுகள் உருண்டோடின. 1948 மார்ச் நியூயார்க் சிட்டியிலுள்ள உலகப் புகழ் பெற்ற "வால்டோர்ப் அஸ்டோரியா" எனும் நட்சத்திர ஒட்டலில் வி வி ஐ பி சூப்பர் சூட்டுகளில் ஒன்றில் வைத்து சர்.சி.பி யை மீண்டும் சந்தித்தேன்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இந்து மதத்தைப் பற்றி சர் சி பி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார் எனும் செய்தியை அங்கு படித்துக் கொண்டிருக்கும் ஒரு இந்திய மாணவன் என்னிடம் கூறிய போது தான், சர் சி பி நியூயார்க் வந்துள்ள விபரமே எனக்குத் தெரிந்தது. உடனே புறப்பட்டேன்.

நான் வசிக்கும் கார்னலிருந்து சுமார் 300 மைல் பயணம் செய்து சர் சி பி இருக்கும் இடத்தை அடைந்தேன்.

### சேவைக்குக் கிடைத்த பரிசு :

எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத விதமாக என்னைச் சந்தித்த சர் சி பி மிகுந்த மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தார். " நாராயண், என் கன்னத்தையும், கூர்ந்து கவனி, அங்கு காணப்படும் மிகச் சிறிய ஆபரேஷனுக்குப் பிறகு டாக்டர்கள் செய்த அலங்காரங்கள். நான் உன் நாட்டிற்குச் செய்த மிகப் பெரிய சேவைக்காக உன் நாட்டு மக்கள் எனக்களித்த பரிசுகள் இவை.

என்னைக் கொல்வதற்கல்லவா அவர்கள் முயன்றார்கள். சரி அதையெல்லாம் இப்பொழுவது கூறுவதால் என்ன பயன்?

இன்று மாலையில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நான் பேசவுள்ளேன். பல்கலைக்கழகத்தாரின் வற்புறுத்தலின் பேரில் தான் பேசவுள்ளேன். இந்து மதம் பற்றி பேச உள்ளேன். இங்கு மூன்று நான்கு தினங்கள் இருப்பேன். எனக்கு கடிதம் எழுத வேண்டுமென உனக்கு எப்பொழுதாவது தோன்றினால் "டிலைட்" ஊட்டி எனும் முகவரிக்கு எழுது என்றார்.

*வளரும். . . .*




வாகீச கலாநிதி கி.வா.ஜ.



"எப்படி வேண்டுமானாலும் அறியலாம். புலவர் எது செய்தாலும் சிறப்பாக நினைப்பவர் அவர்; நயத்தக்க நாகரிகம் உணர்ந்தவர்" என்றார்.

அன்று சிறந்த விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. தொண்டை நாட்டுப் புலவரும் கொங்கு நாட்டுப் புலவரும் சர்க்கரையும் வேறு சிலரும் அமர்ந்து விருந்துண்ணலாயினர்.. புலவரை உபசரிக்கும் பேற்றைத் தாமும் பெற வேண்டும் என்ற ஆர்வத்தால் சர்க்கரையின் மனைவியும் தாயும் உணவு பரிமாறினர். தொண்டை நாட்டுப் புலவருக்கு உணவின்மேல் மனம் செல்லவில்லை.




சர்க்கரையைச் சோதிக்க என்ன வழி என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தார். அப்போது சர்க்கரையின் அன்னை ஏதோ ஒன்றைப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று புலவர் வெறி பிடித்தவரைப்போல எழுந்தார். சர்க்கரையின் அன்னை குனிந்து பரிமாறு கையில் சட்டென்று அவள் முதுகின்மேல் ஏறி அமர்ந்தார். விருந்துண்பவர் யாவரும் பிரமிப்படைந்தனர். அன்னையோ சர்க்கரையின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினாள். அவ்வள்ளல் புன்முறுவல் பூத்தார். “ என்னை அன்போடு பத்து மாதம் சுமந்தாயே; இந்தத் தமிழ்க் குழந்தையை ஒரு நிமிஷம் சுமப்பதில் வருத்தம் என்ன ? " என்று சாந்தமாகச் சொன்னார்.

அடுத்த கணத்தில் புலவர் கீழே குதித்தார். சர்க்கரையின் முன்னாலே நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். " நான் செய்த பிழையைப் பொறுக்கவேண்டும். உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லை. நீங்கள் கர்ணனென்று சொன்னார்கள். உலகில் எவ்வளவோ கர்ணர்களைக் காணலாம்.

உங்களைத் தருமபுத்திரரென்றே நான் எண்ணுகிறேன் " என்று விம்மி விம்மி உருகிச் சொன்னார்.

கொங்குப் புலவர், புலவரே, சர்க்கரையைக் குழந்தையாகப் பெற்ற அன்னைக்கு இன்று மற்றொரு குழந்தை கிடைத்தது ஆச்சரியம். அந்தக் குழந்தை அன்னைக்கு முன்னே அழுது நிற்பது அதைவிட ஆச்சரியம் ! " என்று உணர்ச்சிப் பூரிப்பிலே பேசினார். புலவர் செய்த பைத்தியக்காரச் செயலைவிட வள்ளலின் உயர் குணத்தையே அங்குள்ளவர்களின் உள்ளங்கள் எண்ணி உருகின.

தொண்டை நாட்டுப் புலவர் சர்க்கரையின் பொறுமையை இப்போது அறிந்துகொண்டார். தமிழ்ப் புல வர்களிடம் அவருக்குள்ள அன்புக்கு எல்லை முடியாதென்பதைக் கண்கூடாகவே தெளிந்தார். பின்னும் சில நாட்கள் ஆனூரில் தங்கினார். அப்பால் சர்க்கரை தந்த பரிசில்களைப் பெற்று ஊருக்குத் திரும்பினார்.

அவர் தம் ஊரை விட்டுப் புறப்பட்டபோது ஆத்திரத்தில், தம் உடன் இருந்தவர்களிடம் தம்முடைய எண்ணத்தை வெளியிட்டிருந்தார். சர்க்கரையைச் சோதிக்கச் செல்வதாகச் சொல்லியிருந்தார். இந்தச் செய்தி எல்லப்பர் காதுக்கும் எட்டியது. ஆகவே புலவர்களும் எல்லப்பரும் அவருடைய வருகையை எதிர் நோக்கியிருந்தார்கள்.

புலவர் வந்தார்.

“போன காரியம் என்ன ஆயிற்று?" என்று நண்பர்கள் கேட்டார்கள். அவர்கள்ளோடு பேச அவருக்கு மனம் இல்லை. நேரே வேகமாக எல்லப்பரிடம் சென்றார்.

“பல காலமாக உங்களைப் போன்ற உபகாரி உலகத்திலேயே இல்லையென்று எண்ணிக்கொண்டிருந்தேன். உங்களையே பாடினேன். உங்களுக்கு இணையாக யாரும் இருக்க மாட்டார்களா என்று ஆராய்ந்தேன். யாரும் இல்லையென்ற முடிவுக்கு வந்திருந்தேன். இப்போது வேறு ஒருவரைக் கண்டேன். எனக்கு ஒரு தாயையும் அண்ணனையும் கண்டு கொண்டேன் ’’’ என்று அவர் பேசினார் ; பாராட்டினார் ; போய் வந்த கதையைச் சொன்னார். அவர் உள்ளத் திலே ஏற்பட்ட உவகை ஒரு தமிழ்ப் பாடலாக உருவெடுத்தது.

*வளரும்......*

திரு. ச. க. அறிவரசன், எம்.ஏ. (ஆங்கிலம்), எம்.ஏ. (தமிழ்), எம்.எல்.இ., பி.எட்.

தலைமைச் செயலகத்தின் மொழிபெயர்ப்புத்துறையில் துணை இயக்குநராக அரும்பணியாற்றியவர். அவர் 1982ஆம் ஆண்டு தொகுத்து வைத்திருந்த அகராதிச் சொற்களை அவர் நினைவாக வெளியிடுகிறோம்.

116

| | | |
|---|---|---|
| 2131 | Check list | சரிபார்ப்புப்பட்டியல் |
| 2132 | check measuring | செய்த பணியை அளவிடுதல் |
| 2133 | Check memorandum for disciplinary cases | ஒழுங்கு நடவடிக்கை பரிசீலனைக் குறிப்பு |
| 2134 | Check off system | சோதனை ஏற்பாடு |
| 2135 | check post | சோதனைச் சாவடி |
| 2136 | Chief Controller of Import and Export | இறக்குமதி, ஏற்றுமதி தலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரி |
| 2137 | Chief Guest | சிறப்பு விருந்தினர் |
| 2138 | Chief Minister's Eye Camp Fund | முதலமைச்சர் கண்ணொளி வழங்கு திட்ட நிதி |
| 2139 | Chief Minister's Fire Relief Fund | தீ விபத்து முதலமைச்சர் நிவாரண நிதி |
| 2140 | Chewing topacco | சுவைக்கும் புகையிலை |
| 2141 | Chinddrella | பாராட்டப்படாத பணியாக |
| 2142 | Chinese Aggression | சீனா படையெடுப்பு |
| 2143 | Chinese hatcheries | சீனமுறை மீன் குஞ்சு பொறிப்பாகங்கள் |
| 2144 | Chip Board | காகித அட்டைப் பெட்டிகள் |
| 2145 | Chordless telephone | கைவழிப்பேசி |





20



# புகழ் வணக்கம்

## பிறந்த நாள் புகழ் வணக்கம்



**24.04.1936**

**தில்லை நடவரசர் நட அசைவே**
**நானிலத்தின் இயக்கமென்பார்**
**ஔவை நடராசர் நாவசைத்தால்**
**நற்றமிழும் நடனமிடும்**
**முல்லை மலர்ச் சிரிப்பால் எமை**
**ஆளும் முத்தமிழின் வேந்தே**
**என்றும் நும் நினைவில்**

**கண்ணன்**
**அருள்**
**பரதன்.**


தமிழறிஞர்
ஔவை நடராசன் அவர்களின்
பிறந்தநாள் விழா நினைவேந்தல்,
படத்திறப்பு மற்றும்
முனைவர் ந.ஔவைஅருள்
அவர்கள் எழுதிய
'THE NOBLE KURAL'
நூல் வெளியீட்டு விழா

நாள்: 24.04.2023 (திங்கட்கிழமை) நேரம்: முற்பகல் 11.30
இடம்: சென்னை மாநிலக்கல்லூரி (M28) திருவள்ளுவர் அரங்கம்

வரவேற்புரை: A.புகழேந்தி, எம்.ஏ.,
செயலாளர், சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்

தலைமை: முனைவர் திரு. இரா.இராமன், எம்.ஏ.,
சென்னை மாநிலக் கல்லூரி முதல்வர்

சிறப்புரையாற்றி நூல் வெளியிடுபவர்:
மானமிகு ஆசிரியர் கி.வீரமணி, எம்.ஏ.,பிஎல்.,
தலைவர், திராவிடர் கழகம்

நூல் பெறுபவர்கள்:
முனைவர் திரு. இரா.இராமன், எம்.ஏ.,
சென்னை மாநிலக் கல்லூரி முதல்வர்

நல்லாசிரியர் முனைவர் கோ.பெரியண்ணன், எம்.ஏ., எம்.ஃபில், பிஎச்.டி.,
தேசியத் தலைவர், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம்

திருமிகு. தி.கோ.சீ.இளங்கோவன், எம்.ஏ., எம்.ஃபில்
கௌரவ தலைவர், சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள்
மாணவர்கள் சங்கம், மேனாள் பாராளுமன்ற உறுப்பினர்

முனைவர் சீ. இரகு, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி

விழா தொகுப்புரை: வழக்கறிஞர் இரா.நடராசன், எம்.ஏ., பி.எல்.,
சட்ட ஆலோசகர், சென்னை மாநிலக் கல்லூரி
முன்னாள் மாணவர்கள் சங்கம்

நன்றியுரை: மு.அருள் நாயகம், பி.எஸ்ஸி.,
துணைத் தலைவர், சென்னை மாநிலக் கல்லூரி
முன்னாள் மாணவர்கள் சங்கம்

### மணிமொழி

நமக்கு உண்மையான ஆர்வம் மட்டும் வந்து விட்டால், எத்தகைய இடர்ப்பாடுகளையும் எதிர்கொள்ள ஆயத்தமாகி விடுகிறோம்.
- லேனா தமிழ்வாணன்
மணிமேகலை பிரசுரம்

### இதே நாளில் அன்று

**ஏப்ரல், 24, 1936**


நடராசன்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில், அவ்வை துரைசாமி – லோகம்மாள் தம்பதிக்கு மகனாக, 1936ல், இதே நாளில் பிறந்தவர் நடராசன்.

இவரின் தந்தை நற்றிணை, சிலப்பதிகாரம், திருவருட்பா உள்ளிட்டவற்றுக்கு உரை எழுதிய தமிழறிஞர். தந்தையின் வழியில் இவரும் தமிழ், ஆங்கில இலக்கியங்களில் ஆர்வமாக இருந்தார். மதுரை தியாகராஜர் கல்லூரியில், எம்.ஏ., தமிழ்; சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முனைவர் பட்டம் பெற்றார். பல கல்லூரிகளில் தமிழ் பேராசிரியராக பணியாற்றிய இவர், டில்லி வானொலி நிலையத்தில், அறிவிப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றினார்.

தமிழக செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குனர், தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் பண்பாட்டுத் துறை செயலர், தமிழ் பல்கலை துணை வேந்தர் உள்ளிட்ட பதவிகளை வகித்தார். வள்ளலார், தமிழர் கலைகள் உள்ளிட்ட தலைப்புகளில் ஆய்வு நூல்களை எழுதினார். பன்னாட்டு கருத்தரங்குகளில் பங்கேற்ற இவர், 'பத்மஸ்ரீ, கலைமாமணி' உள்ளிட்ட விருதுகளை பெற்றவர்.

தமிழறிஞர்களால் பாராட்டப்பட்ட இவர், தன், 87வது வயதில், 2022, நவ., 21ல் மறைந்தார்.

பேச்சாலும், எழுத்தாலும், தமிழுக்கு பெருமை சேர்த்த தமிழறிஞர் பிறந்த தினம் இன்று.



மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

**O Flame Red Lord Coated in Argent Ash all over! O, Supreme Spouse of Ma Uma of collyrium lined long eyes and slim waist! O Enticing Ens! Bee hovering broad deep Pools we dive and plunge in a sound way, swimming, arms stroking water, plumbing the depth, rising to praise the glory of thy Holy Feet, we ancient servitor-slaves thine have been so far! O, Lord your play took us slaves, we got rid of woes! We are blessed in bliss as through proper aagamic routines! For us not to revert to birthing, not to wear out, save us and grace!**

**English version Dr Arul**